தென்மொழி

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

சிங்களவா, ஓய்! எங்களையா நீ
சுட்டாய்!, இறைத்தாய் குருதி!...
அங்குள எங்குலம் எழுந்தது; இனி,நீர்
இதனினும் சிதைவுறல் உறுதி!......

சுவடி - 19

ஓலை - 12

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
உரு. 1-25

Scanned with CamScanner

பாவலரேறுவின் அயலகச் செலவு!

வாழ்த்தி வழியனுப்பிய மகிழ் நிகழ்ச்சி!

தமிழ்நிலம், தென்மொழி தமிழ்ச்சிட்டு ஆகிய கிழமை, மாத இதழ்களின் ஆசிரியரும், உ. த. மு. க - வின் முதல்வருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், மேலை நாடுகளில் இயங்கி வருகின்ற பல்வேறு தமிழ் இயக்கங்களின் அழைப்புக்கு இணங்கி, சென்ற 10-9-83 காரிககிழமை (சனி) அன்று, காலை 6-00 மணி அளவில் இந்திய வான்வழி (Indian Air Lines) (எண் : 440) என்னும் வானூர்தி வழி, செலவு (பயணம்) மேற்கொண்டுள்ளார்.

சுற்றுச் செலவு மேற் கொண்ட நாளுக்கு முன்னாள் காலைப் பொழுதிலிருந்தே, அவரின் அயலகச் செலவு பெரும் பயனுடையதாகவும் நிறைவுடையதாகவும் அமையவேண்டும் என்று வாழ்த்துவதற்கும், வழியனுப்புவதற்கும், தமிழகத்தின் பலபகுதிகளிலிருந்தும் உ.த.மு.க. வின் முகமையான பொறுப்பாளர்களும், தென்மொழியன்பர்களும், தமிழின நலன் நாடும் பிற இயக்கங்களைச் சார்ந்த அன்பர்களும் பெரியவர்களும் தென்மொழியில்லத்திற்கு வந்து போகவும், தங்கவும் ஆக இருந்தனர். பாவலரேறு அவர்களிடம் அன்பும் மதிப்பும கொண்ட பேராசிரியர் சிலரும் வந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

"விடுதலை" நாளிதழின் துணையாசிரியர் பாவலர் கலி. பூங்குன்றன், பேராசிரியர் இறையன் ஆகிய இரு திராவிடர் கழகச் செயலாண்மையர் அந்நாள் இரவில், பாவலரேறு அவர்களைக் கண்டு, தம் மகிழ்ச்சியையும் வாழ்த்துதலையும் தெரிவித்து, கைத்தறி ஆடையொன்றைப் போர்த்தினர். செலவு நீடு சிறக்கத் தம் விருப்பங்களைத் தெரிவித்து, சற்று நேரம் உரையாடிச் சென்றனர்.

செலவு மேற்கொண்ட 1 -9-83 அன்று வைகறைப் போதில் திரு. ந. முத்துக்குமரன், திரு. மா. ஆறுமுகம், திரு. மா. செ. தமிழ்மணி, திரு. மாரி. அறவாழி, திரு. இளஞ்சேரல் முதுபாண்டியன், திரு. இளங்கோ, குழந்தை - ஈகவரசன், பர். திரு. ஆறிறைவன், திரு. மா. பூங்குன்றன், திரு. ப. அருளி, திரு. துரை, திரு. வேலவன், திரு. ஞாலன், திரு. ப. முருகவேள், திரு. சௌந்திர பாண்டியன், திரு. ஏ. எசு. மணவைத்தம்பி, திரு. பர். அறவாணனார், திருவாட்டி. பர். தாயம்மாள் அறவாணனார், திரு. துரை - தென்னவன், திரு. சிவபெருமான் ஆகியோர் நிறைந்த உள்ளத்தினராய், பாவலரேறு அவர்களை வழியனுப்புவதற்குக் குழுமி, ஐயா அவர்களுக்கு அன்பளிப்புகள் செய்தனர்.

காலை 6-00 மணியளவில், கழகமுதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் அனைவரின் அன்பு வாழ்த்துதலகளும், சூழக் கமழ, உளம் நிறைந்த வணக்கத்தையும் அன்பையும் தெரிவித்து விட்டு, அனைவோரிடத்திலும் தனித்தனியே விடைபெற்று, வானூர்தி யேறினார்கள்.

பல கழகங்கள் பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, நார்வே, இலண்டன் போன்ற நாடுகளில் ஆர்வமுடன் நடத்தும் விழாக்களிலும் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் ஆய்வரங்குகளிலும் தொடர்ந்து கலந்து கொண்டு சிறப்பித்துப் பயன்பரப்பி வருவதாகச் செய்திகள் அங்கிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

— உதவியாசிரியர் குழு.

Scanned with CamScanner

என்னினும் என்ன, இன்று இவர்கள் அடிமைகள்!

முன்னந் தோன்றிய நிலத்தில் முகிழ்த்தவர்!
மூத்த தமிழ்மொழிக் குணர்வின் மூத்தவர்!
தென்னன் பாண்டியன் குமரிக் குடிமையர்!
திசையெ லாம்பரந் துலகை அளந்தவர்!
இன்னரும் இயலிசை நாடகம் யாத்தவர்!
இந்திய — நாவலந் தேயத்து இறைமையர்!
என்ன வியப்படா? — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன இன் றிவர்கள் அடிமைகள்!

வான்முகில் மலையிடை வாழ்க்கை தொடங்கியர்!
வளந்தரு குறிஞ்சியில் காதலை உணர்ந்தவர்!
தேனுமிழ் முல்லையை மருதம் நெய்தலைத்
தீர ஆய்ந்துநல் இல்லறம் வகுத்தவர்!
கான்தரு பொருளையும் கழனியும் கண்டவர்!
கடலின் பரப்பையும் கடந்தயல் சென்றவர்!
ஏன், தம்பி தெரியுமா? — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

கல்லைக் கல்லொடு மோதிய கனப்பினர்!
காய்ச்சி இரும்பினை உருக்கிடக் கற்றவர்!
சொல்லைச் சொல்லொடும் பொருத்தி மொழியெனச்
சுடர்விடும் உணர்வினுக் குருவம் வரைந்தவர்!
வில்லைப் புலியினைக் கயலைக் கொடியினில்
வெள்ளைப் பனிமலைத் தலையில் பொறித்தவர்!
எல்லைப் புகழினர் — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

தொன்று தொட்ட பெருமையின் தோன்றல்கள்!
தோல்வி என்பதே தோன்றிடா வீரர்கள்!
கன்று முட்டிய பாலைக் குடிப்பினும்
காதலில், வீரத்தில் எச்சில், கா ணாதவர்!
குன்றையும் மலையையும் கொடையாய் வழங்கியர்!
கோடி இலக்கிய இலக்கணம் கண்டவர்!
என்றே பிறந்தவர்! — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

காற்றையும் கையினிற் பிடித்துப் பழகியர்!
கல்லையும் கூழ்போல் கரைத்துக் குடிப்பவர்!
ஆற்றையும் வளைத்தணை கட்டிப் பாய்ச்சியோர்!
அண்ட வெளிக்கதிர் மண்டிலம் அளந்தவர்!
கூற்றையும் எதிர்த்தவர்! கொள்கை வளர்த்தவர்!
கூர்தல் அறத்தையும் உயிரையும் உணர்ந்தவர்!
ஏற்றமென் சொல்லுவேன்? — இவர்கள் தமிழர்கள்!
என்னினும் என்ன, இன் றிவர்கள் அடிமைகள்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே யாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி—19 ௨௦௧௪ மடங்—கன்னி (சூலை-அக்-83) ஓலை 12

இதழ் ஆசிரியர் **பாவலரேறு** அவர்கள் வெளிநாடு சென்றுள்ளமையால், ஆசிரியவுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

உனக்குத் தன்மானமும் இல்லை!

இவ்வுலகத்தின் முதல்மாந்தன் தமிழன்தான்! இவ்வுலகில் முதன்முதலாக மொழியைப் பேசி, எழுதி, பயின்று, பயிற்றி முதன் முதலாகக் கருத்து விளக்கப் படிநிலை வளர்ச்சியை இயற்கைப் போங்கினூடேயே அடைந்து முன்னேறியவனும் தமிழனே! இன்றைக்கும் அன்றைக்கும் பழைய மொழிகளாகக் கருதப் பெற்ற ஐந்தாறு செப்ப மொழிகளை வளர்த்தெடுக்க, இவனின் மொழியே மூலமானது! தமிழனின் மொழியே உலகத்தின் முதல் மூலமொழி என்னும் உண்மையை, தமிழ்ச்சொற்களின் ஒவ்வொரு ஒலியலை களும் ஒளிர்வித்துக் காட்டுகின்றன! உலகத்தின் சிறந்த நாகரிக அமைப்பையும் பண்பாட்டுச் சிறப்புணர்வுகளையும் நிறக்கப் பெற்றுப் பிற இனங்களும் அவற்றைப் பின்பற்றிப் பெருமையுற ஒட்ப வாழ்க்கையை நடத்தியவன் இவனே!

தன்மானம், நேர்மை, மறம், ஈகை, விருந்தோம்பல், ஒழுக்கம், - ஆகிய செழுமை வாய்ந்த பண்புக் கூறுகள் இவனின் குருதியணுக் களிலேயே கருவாய் உருவுற்றுப் போனவையாகும்! "அறம்" என்னும் அரிய செம்பொருட் சொல்லை இவன் உருவாக்கிப் பயன் படுத்திய நிலையிலேயே, இவனின் உளவளர்ச்சித் தெளிவையும் மாந்தமேந்தன்மைப் பொலிவையும் உணரலாகும்! "மனத்துக்கண்

மாசிலன் ஆதல் அனைத்து அறன்'' - என்றவாறு அறத்திற்குரிய மூலவுண்மையை, மூலப் பொருளை எளிய இலக்கிய வரியொன்றி லேயே அடக்கி, மலை விளக்கம் போன்ற தெளிவை வலிதாக வெளிப் படுத்திவிடும் திருவள்ளுவ வாய்மொழியில், இவனின் வாழ்க்கை வரலாற்றுச் சாறநிலையை விளங்கிக் கொள்ளலாகும்! இத்தகு எளிய அரிய பயன்பாட்டு மெய் விளக்கத்தை, இன்றைக்கும்கூட உலகின் வேறுபிற எத்தகு அறநூலாசிரியனும் தெளிய விளக்கிவிடல் இயலாது! இல்வாழ்க்கை வாழுதலையே 'இல்லறம்' என்ற சொல்லால் குறிக்கக்கூடிய அளவுக்கு உலகின் வேறந்த இனமும் மனப்பண்பாட்டு நிலையில் இன்னும் வளரவேயில்லை!

''காதலர் தூதொடு வந்த கனவினுக்கு யாது செய்வேன்கொல் விருந்து" - என்னும் திருவள்ளுவரின் இன்பத்துப்பாலின்பாற் குறிப்பிட்டிருக்கும் ஓர் இலக்கியக் குறளில், தமிழினத்தின் விருந் தோம்புதல் பண்பின் ஒளிக்கரு உள்ளொளிர்வதை மேம்போக்காகக் கண்டாலும்கூட ஒருவர்க்குத் தெளிய விளங்கிவிடும். என் காதலரை இந்தக் கனவு அழைத்து வந்துள்ளது; அவர் அனுப்பி யுள்ள செய்தியைத் தூதுஉரைக்க என்பால் வந்துள்ளது! இந்தக் கனவுக்கு என்ன விருந்து படைப்பதென்று தெரியவில்லையே!" என்று காதலி அலமரலுற்றுப் புலம்புவதாகத் திருவள்ளுவர் படைத்துள்ள இலக்கியக் காட்சிக்குள், பண்டைத் தமிழரின் விருந் தோம்பல் பண்பின் பரப்பளவும் நெட்டளவும் கட்டுண்டு கிடப் பதைக் காணலாகும். கனவுக்கு விருந்து படைக்க ஒரு காதலி துடிப்பதாக, இந்தக் காலத்து எந்த இலக்கியப் படைப்பாளியும் ஒரு காட்சியைப் படைத்துவிடுவான் என்று எவராலும் கனவுகூடக் கண்டுவிட இயலாது! கற்பனையாகக் கூட உலகின் பிற இனத்து எத்தகு எழுத்தாளரும் இதனைக் குறித்துவிடல் இயலாது. ஏனெனில், இவ்விலக்கியக் கூற்றின் கருவில், எழுதிய படைப்பாளியின் இனத்துப் பண்பின் இன்றியமையாத வாழ்க்கை முறைமையே உள்ளடங்கியுள்ளது! கதிரவன் சாயுங்காலத்தின் பின், இரவு நெருங்க வருகையில், வீட்டுத் தெருக்கதவைத் தாளிடுவதற்கு முன்னால், "எவரேனும் விருந்தினர் உள்ளீரோ?" என்று கேட்டு விட்டு, இல்லையென்பது அறிந்த பின்னரே, கதவைத் தாளிடும் வழக்கம் தமிழக மக்களிடம் இருந்தது என்னும் கழக இலக்கியச் சான்று, விருந்தோம்பும் பெருநாகரிகச் செழுமையில், நம் இனம் எவ்வாறு தழைத்து வளர்ந்திருந்தது என்பதை எண்ணிப் பார்ப் பதற்கு ஒரு மூலமாய் நிற்கின்றது! இல்லறம் நடத்துவதே விருந் தோம்புவதற்குத்தான் என்றவாறான கருத்தும் தமிழகத்தில் தளிரிட்டுக் கிடந்திருக்கின்றது.

இத்தகு அரும்பண்பைத் தமிழகத் தமிழர்கள் மட்டுமல்லாது, தமிழகத்தின் சேய்நிலமாக, கடல் வளைஇய திருத் தீவாகிய இலங்கை மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாக மரபுமரபடியாக வாழ்ந்து நிலைத்திருந்த தமிழக் கிளைக் குடியினரும் தவிராது

பெற்றிருந்தனர்! அத்தகு பண்புடைமையே, அங்கு வாழ்ந்துவந்த தமிழினத்தொரு பிரிவாராகிய நாகர்களையும், அத்தீவுக்கு ஏதிலிகளாக நுழைந்த 'விசயன்' என்பானையும் அவனின் தோழர்களையும் வரவேற்று விருந்தோம்பச் செய்தது! இச்செய்தியை அவர்களே குறித்து வைத்திருக்கின்றனர்.

கி. மு. 543 - ஆம் ஆண்டில், அத் தமிழ நாகர்கள் 'விசயன்' என்பானை வரவேற்று விருந்தோம்பி தம்மாட்டேயே வைத்துக் கொண்டார்கள் என்று, கி. பி. ஆறும் நூற்றாண்டளவில் வாழ்ந்த 'மகா நாம தேரோ' என்பவர் தாம் எழுதிய 'மகாவம்சம்' என்னும் நூலுள் விளங்கச் சுட்டியுள்ளார். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்து, அம் 'மகாவம்சம், என்னும் நூலுக்கு விளக்கவுரை வரைந்துள்ள "வல்பொராகுல" என்னும் பெயரிய புத்தமதக் குருவும் அதனைச் சிறக்கக் குறித்துள்ளார்!

இன்றும், சிங்கள இனவெறி அரசு, தாம் வழங்கும் பதிக்கம் (பதக்கம்), மதிப்பளிப்புச் சான்றிதழ்கள், ஆகிய அரசுப் பரிசளிப்புப் பொருள்களின் நடுப்பகுதிகளில், தம் முன்னோன் நினைவாக "விஜயா" என்ற பெயரைப் பொறித்து அளிப்பதே, அவர்களுக்கே உண்மை விளங்கியுள்ள நிலையை நமக்கு விளக்குவதாகும்!

புற்றீசல் போன்ற தம் மக்கள் பெருக்க வளர்ச்சியால், இன்றைக்கு அந்தச் சிங்கள இனம் அத்தீவையே ஆளுமை கொண்டு, அம் மண்ணுக்கே உரிய பழந்தமிழ் மரபு மக்களையும், நம் தமிழகத்தினின்று 1837 – ஆம் ஆண்டளவிலும் அதற்கு அடுத்த சில ஆண்டுகளிலும் அந்நாட்டை உழைத்து வளப்படுத்துவதற்கென ஆங்கிலேயர்களால் அழைத்துச் செல்லப் பெற்ற தமிழகத் தமிழ் மரபினர்களையும் கடந்த முப்பத்துமூன்று ஆண்டுக் காலமாக உரிமையறுத்தும் உடைமை பறித்தும் உடல்கள் வதைத்தும் உயிர்கள் சிதைத்தும் கொடுந்தாண்டவம் ஆடிவருகின்றது! கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு - முதலியனவற்றைக் கொடுங் கொடுமையாகச் செய்து கொண்டேயிருப்பது அவர்களின் தொழிலாகப் போய்விட்டது! அந்நிலைகளுக்கு ஆட்படுவதும், அலறுவதும் அஞ்சுவதும் அழுவதும் குமைவதும் தமிழினத்துக்கு வாடிக்கையாகப் போய்விட்டது!

கொழும்புவில் உள்ள வெளிக்கடைச் சிறைச்சாலையில், கடந்த 26-7-83 அன்று, 37 தமிழீழ விடுதலைப் போராளிகளும், 27-7-83 அன்று அதே சிறையில் 17 தமிழீழ விடுதலைப் போராளிகளும் ஆக மொத்தம் 54 பேர்கள், கோடரி கத்தி இரும்புத்தடி ஆகியவற்றால் சிறைக்குள் இருந்த சிங்களக் குற்றவாளிகளால் (அரசே திட்டமிட்டு ஏவல் கொடுத்து) அடித்தும் குத்தியும் துடி துடிக்குமாறு படுகொலை செய்யப்பட்டார்கள் என்றால், நாட்டில் எவ்வளவு கொலைகள் கொடுமையாக நிகழ்ந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கையிலேயே எளிதில் விளங்கும்!

இப்படி, கடந்த காலங்களில் 12,000 தமிழர்கள் மிக மிகக் கொடுமையாக மூலை முடுக்கெங்கும் படுகொலை செய்யப் பெற்றுத்

தூக்கி எறியப் பட்டிருக்கிறார்கள்! பல்லாயிரக் கணக்கான வீடுகள் எரிக்கப் பெற்றன. பல்லாயிரக் கணக்கில் தமிழர்கள் அங்குமிங்கும் அலறியோடி அகதிகளாயினர். கோடிக் கணக்கில் சொத்துகள் சூறைக் கொள்ளைக்குப் போனது! இன்னும் அந்நிலை அடங்கிய பாடில்லை! சிங்கள அரசின் அனைத்துப் பேயாட்டங்களும் முதலிலேயே திட்டமிட்டே நடத்தப்பெறுகின்றன! தமிழர்க்கு என்று அங்கு வாய்த்துள்ள தமிழர் தலைவர்களும் உண்மையாகவே தமிழீழ விடுதலைக்கும், தமிழீழ, மலையகத்தமிழ் மக்களுக்குரிய மீட்சிக்கும், வாயளவில் தவிர செயலளவில் உருப்படியான வேலைகள் எதனையும் செய்யாதவர்களாகவும், செய்ய விரும்பாதவர் களாகவுமே உள்ளனர்! தமிழீழ மக்களின் விடுதலையைச் சமைத்துத் தருவதற்கு உரியவர்களாக, - ஈகவுணர்வும் உயிருக்கு அஞ்சாத தன்மையும், விடுதலை வேட்கையும் செறிந்த மறம் திணிந்த இளைஞர் களின் கூட்டத்தையே அம்மக்கள் எதிர்பார்த்து நம்புகிறார்கள்! அவ் வீர இளைஞர்கள் அந்நாட்டை வென்றெடுக்கப் போவது உறுதியென்பது, அண்மையில் மட்டக்களப்பு சிறைச் சாலையை உடைத்து 271 சிறையாளிகளை மிகத் திறமையாக மீட்டுச் சென்றிருப்பதால் தெளிவாகத் தெரிகின்றது. அவ்வளவு பேர்களை யும் மீட்டு விடுவிக்கும் போது சிறைக் காவலர் ஒருவரைக்கூட ஒருசிறிதும் துன்புறுத்தாமல் அவர்களைக் கட்டிப் போட்டு விட்டு மட்டுமே, திரும்பிச் சென்றிருப்பது, அவ்விளைஞர்கள் எந்தப் பொழுதிலும் முறையாக அரசியல் அணுகுமுறையைக் கடைப் பிடிக்கும் தெளிவான விடுதலைப் போராளிகள் என்பதையே காட்டு கின்றது! அவர்களின் அத்தகு அரிய திற வினையின் வழி, சிங்கள அரசின் திறக் குறைபாட்டையும் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார் கள் என்றே கூறத் தோன்றுகின்றது! ஓ! உலகெங்கணும் ஏறத் தாழ 47 நாடுகளில் ஏதாவதொன்றனுள் சிதர்ந்து வாழும் தமிழனே! நீ வாழ்விடத்தால் பிரிவுற்றுக் கிடப்பதைப் பற்றிக் கவலையில்லை! நாம் அனைவரும் ஒரே குருதியில் விண்டு விண்டு வித்து விளர்ந்த ஒரே மரபினர் என்பதை ஆழமாக நெஞ்சில் பதித்து, மிகச் செறிவாக உள்ளம் ஒத்து, அத் தமிழீழ மக்களைக் கொடுநிலை யினின்று காப்பாற்றி வாழ்விலுயர்த்த அல்லும் பகலும் அயராது தொண்டாற்றும் தமிழிளைஞர்களுக்கு ஒத்துழைப்பு தருவதற்கு முன் வருவாயாக! அதுவே போதுவது! தமிழராகப் பிறந்துள்ள ஒவ்வொரு தமிழருக்கும், இந்த இலங்கைச் சிக்கலில் ஈடுபட்டுத் தீர்வுகாண்பதற்கு, அதாவது அந்த நாட்டின், அந்த நாட்டு மக் களின் விடிவுக்கு விடுதலைக்கு வழிசெய்வதற்குகடமை இருக்கிறது!

இந்த நிலைமையிலும் நாம் இதுபற்றிக் கவலை கொள்ளாமலும் கருத்துச் செலுத்தாமலும் கடமையாற்றாமலும், வயிறு, வாழ்க்கை, மனைவி, மக்கள் என்றவாறே இருப்போமேயானால், நாம் இனமானம் அற்ற இழிகுடிகளாகவே இருக்கிறோம் என்றல்லவோ பொருளாகும்!

இனமானம் அற்றவராக நாம் இருப்போமேயானால், நமக்குத் தன்மானமும் இல்லை என்றுதானே பொருளாகும்! வேறென்ன?

— ப. அருளி

வரப்பெற்ற நூல்களும் அவற்றின் சுருக்கக் குறிப்புகளும்

பன்மொழிப் புலவர். பேரா. மு.ச. **சிவம்** அவர்களின் நூல்கள்:

1. திருக்குறள் நொடி வினா-விடை

திருக்குறள் கருத்துக்களை விடையாகக் கொண்டு, அவற்றில் உள்ள நுட்பங்களை வினாவாக்கி எழுதப்பெற்ற நூல் இது. மொத்தம் 1523 வினாக்களும் அவற்றுக்கு விடைகளாக உள்ள திருக்குறள் பாக்களும் உள்ளன. எளிய முறையில் திருக்குறளைப் படிக்க உகந்தநூல் முறை.

பக்கம் : 246. விலை : உரு. 10.

2. குட்டித் திருக்குறள்:

திருக்குறளில் உள்ள பழமொழிகள் போலும் கருத்துத் தொடர்கள் திரட்டித்தரப்பெற்று, அத்தொடர்களுக்கான பொருளும் தரப்பெற்ற பயனுடைய நூல்.

பக்கம் : 56. விலை : உரு. 3.50.

3. தமிழின் அழகுகள்

தமிழ்மொழியின் சிறப்பியல்களைப் பல்வேறு தலைப்புகளில் திறம்பட விரித்தும் விளக்கியும் கொடுத்துள்ளார் ஆசிரியர் கருத்துகள் பேரறிஞர்கள் பலரின் கூற்றுகளாகவும் அமைந்துள்ளன. தமிழன்பர் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய சிறந்த நூல்.

பக்கம் : 84. விலை : உரு. 5.00.

4. வாழ்வாங்கு வாழ வள்ளுவர் வழங்கும் அறிவுரைகள்

திருக்குறளில் உள்ள சிறந்த கருத்துரைகள் அகரவரிசையில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

பக்கம் : 50. விலை : உரு. 2.00.

மேற்கண்ட நான்கு நூல்களும் கிடைக்குமிடம் : **மீரா நிலையம்.** 35. பாப்பாத்திக்காடு, முதல்தெரு. ஈரோடு-4

பர். **ச.சு. இளங்கோ.** அவர்களின் நூல்கள் :

1. பாரதிதாசன் ஒரு நோக்கு

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் முழுநூல்களையும் ஆய்ந்து, அவற்றில் தாம் எடுத்துக் கொண்ட தலைப்புகளையொட்டி வரும் கருத்துகளைத் திறனாய்வு முறையில் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். ஆத்திசூடிகள், உணவியல் நெறிகள், பாடவேறுபாடு, இணைப்புகள், நூற்பட்டியல் — ஆகியவை ஆசிரியர் பகுத்துக்கொண்ட தலைப்புகள். படிக்க வேண்டிய நூல்.

Scanned with CamScanner

பக்கம் : 260. விலை : உரு : 15.
கிடைக்குமிடம் : **சிந்தனையாளர் பதிப்பகம்,**
51. சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28.

2. **குடியரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள்**

1981-ஆம் ஆண்டு மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு ஆய்வரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை. பெரியாரின் குடியரசு இதழ்களில் பாவேந்தர் எழுதி வெளிவந்த பாடல்கள் பலவற்றையும் எடுத்துக் காட்டி, அவற்றைத் திறனாய்வு முறையில் ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். ஆய்வு மாணவர்களுக்கு வழி காட்டியாய் அமைந்த நூல்.

பக்கம் . 112. விலை : உரு 1 5.
கிடைக்குமிடம் : ஏரக வெளியீடு, மதுரை : 625020.

மறைமலை அடிகளாரின் இலக்கியப் படைப்புகள்
ஆசிரியர் : **பர். நா. செயப்பிரகாசு.**

ஆசிரியர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் பண்டாரகர் பட்டம் பெற எழுதிய ஆய்வு இடுநூல் இது. தமிழில் சிறந்த நூல் வெளியீட்டுக்கான தமிழக அரசின் பொருளுதவி பெற்ற நூல் இது.

மறைத்திரு. மறைமலையடிகளாரின் செய்யுள் நூல்கள், கட்டுரை நூல்கள், புதுக்கதை நூல்கள், நாடக நூல்கள், ஆராய்ச்சி நூல்கள். பிற படைப்புகள் ஆகியவற்றை முறைப்பட வகுத்து எடுத்துக் கொண்டு, அவற்றின் இலக்கிய இயல்புகள், நெறிகள், பன்மொழிப் புலமை, திறமை, மொழிக் கொள்கை, இலக்கியக் கொள்கை ஆகியவற்றையும் திறன்பட ஆராய்ந்து விரிவாக எழுதியிருப்பதுடன், அடிகளாரின் கடிதங்கள், நாட் குறிப்புகள், அவர் நடத்திய இதழ்கள், அவற்றில் வந்த கட்டுரைகள் முதலிய வற்றையும் திறனாய்வு முறையில் சிறப்புற ஆய்ந்துள்ளார் ஆசிரியர். நூலின் பிற்பகுதியில் அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்புகள், அச்சில்வராத கடிதங்கள், முதலியனவும் எல்லாரும் அறிந்து மகிழும் வண்ணம் தெளிவுற எழுதப்பெற்றுள்ளன. மொத்தத்தில் தவத்திரு. மறைமலையடிகளாரைப் பற்றிய அனைத்துச் சிறப்பியல்களும், பெருமைகளும், அறிவுத்திறன்களும் மிகச் செறிவாகவும் சிறப்பாகவும், எஞ்சுதலின்றி முழுமையாகவும் எடுத்து விளக்கப் பெறறுள்ளன. அறிஞர் இல்லங்களிலும், ஆராய்ச்சி மாணவர்கள் கைகளிலும் தனித்தமிழ் அன்பர்கள் நூற்பேழைகளிலும் கட்டாயம் இருக்க வேண்டிய அறிவுநூலும், வரலாற்று நூலும் ஆகும், இது.

பக்கம் : 298 விலை உரு : 25.
கிடைக்குமிடம் : **அருள் ஒளி** :, 20. ஐந்தாவது தெரு, வள்ளுவர் கோட்டம், சென்னை-34.

பல்லாங்குழி.
ஆசிரியர், பர். ப. **தாயம்மாள் அறவாணன்.**

Scanned with CamScanner

அம்மையார் சிலவாண்டுகள் மேற்கு ஆப்பிரிக்கா, தக்கார் பல்கலைக் கழகத்தில், இலக்கிய இணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்கள். ஆப்பிரிக்க மக்களின் மாந்தவியல் பேராசிரியராகப் பணியாற்றிய தம் கணவர் பர். அறவாணன் அவர்களுடன் அங்கு இருந்த பொழுது, அந்நாட்டு மக்களில், பெண்களின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி, அவர்களின் பல்லாங்குழி ஆட்டத்தைக் கண்டு வியந்து, அதனை நம்நாட்டுப் பல்லாங்குழியாட்டத்துடன் ஒப்பவைத்து ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார்கள்.

மக்களியல் ஆய்வாளர்களுக்கும், தமிழின வரலாற்று மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பாடும், வியப்பும், மகிழ்ச்சியும் தரும் இந்நூல், அனைவரும் படித்து அறிவும், இன்பமும் பெறத்தக்கது.

பக்கம்: 151, விலை: உரு-12.
கிடைக்குமிடம்: **பாரி நிலையம்** 184 பிரகாசம் சாலை, சென்னை-1.

பாவலர் முல்லைவாணன் எழுதிய நூல்கள்.

1. **கரும்பு:** (சிறுவர் பாடல்கள்)

சிறுவர்களுக்கான 47 பாடல்களின் தொகுப்பு இந் நூல். பாடல்கள் இனிமையும் எளிமையும் நிறைந்தமைந்து குழந்தைகள் பாடுவதற்கேற்ற வகையில் அமைந்துள்ளன. உயர்ந்த பதிப்பு.

2. **வீணை:** (சிறுவர் பாடல்கள்)

குழந்தைகளுக்கான 36 பாடல்கள் அடங்கிய நூல் இது கருத்தும், கனிவும் நிரம்பிய பாடல்கள். உயர்ந்த பதிப்பு. அழகிய அட்டை.

3. **ஊஞ்சல்:** (சிறுவர் பாடல்கள்)

இதுவும் குழந்தைகளுக்கான 45 பாடல்களைக் கொண்டநூல் தூயதமிழில் விளங்குவன. உயர்ந்த பதிப்பு.

மேற்கண்ட நூல்கள் ஒவ்வொன்றும் மூன்று சிங்கப்பூர் வெள்ளிகள்.
கிடைக்குமிடம்: **மறைமலை பதிப்பகம்**, அஞ்சற்பெட்டி 633.
சிங்கப்பூர்-9108.

கடலூர் மணிமாறன் நூல்கள்.

1. **எதிர்நீச்சல்** (பாடல் தொகுதி)

காதல், தமிழ், அறம், பொதுமை ஆகிய நான்கு பகுதிகளில் 44 தலைப்புகளில் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பு நூல் இது. பாடல்கள் முழுவதும் தனித்தமிழில் இனிய, அழகிய சொற்களில் மரபு பிறழாமல் இயங்குகின்றன. பேரா. தமிழ்க்குடிமகன், பாவரசு முடியரசன், ஆகியோர் அணிந்துரையும், வாழ்த்துப்பாவும் எழுதியுள்ளனர். பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாராட்டுப்பா நூலின் பெருமதிப்பை நன்கு வெளிப்படுத்துகிறது. 'ஓதுதற்கோ மிக

Scanned with CamScanner

எளிமை! உணர்தற்கோ மிகவளமை! இனிமை! தீதில்லாத் தமிழ்த்தொண்டு! தீங்கில்லாச் சுவைநலன்கள்!' என்று பாவலரேறு இந்நூலைப் பாராட்டியுள்ளார்.

விலை: உருபா 5.

வெளியீடு: **மணிமேகலை பதிப்பகம்** சின்னதாராபுரம் கரூர் வட்டம். 639202.

2. **நான் பாடுகின்றேன்** (பாட்டரங்கப் பாடல்கள்)

பாவலர் ஐந்து பாட்டரங்கங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பு இந்நூல். சிறந்த பாடல்கள் எளிமை இனிமைதவழ உயர்ந்த கருத்துகளைக் கொண்டு பாடல்கள் விளங்குகின்றன. மரபு பிழையாப் பாடல்கள்.

விலை உருபா: 2-75.

3. **இயற்கை வடிவங்கள்:**

பாவலர்கள் சத்தியபாமா, கடலூர் மணிமாறன், கருவூர் தமிழ் மணி, கன்னல், எழில் வாணன் ஆகியோர் நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐந்தியற்கைக் கூறுகளைப் பாடிய பாட்டரங்கப் பாடல் நூல் இது.

விலை: உருபா: 1-50.

4. மயக்கமா? உறக்கமா? (பாடல் நூல்)

ஆசிரியர்கள் கடலூர் மணிமாறன், ம. புகழேந்தி.

பாவலர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் எழுதிக் கொண்ட பாடல் மடல்கள் இவை. மிகவும் சுவையாக உள்ளன. இரண்டு தமிழ் நெஞ்சங்களின் அன்புணர்வும், பண்புநலன்களும் பாடல்களில் மிளிர்கின்றன.

விலை: உரு: ஒன்று:

5. நீதி கேட்ட நெடிய பயணம். (பாட்டு நூல்)

பாவலர்கள் கன்னல், கடலூர் மணிமாறன் ஆகிய இருவரும், கலைஞர் கருணாநிதி அவர்களின் திருச்செந்தூர் நெடுவழிச் செலவைப் பாராட்டி, 34 பாவலர்கள் பாடிய பாடல்களை நூல் வடிவில் தொகுத்தளித்துள்ளார்கள்: பாவரசு முடியரசனார், பாவரசு பொன்னிவளவன், குறளன்பன், குமர. நடவரச ஈவப்பனார், தமிழ்க்குமரன், எழில் வாணன், 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, கன்னல், கடலூர். மணிமாறன் முதலிய பாவலர்கள் பாடியுள்ளனர். உணர்வும், தமிழின நலம் சான்ற கருத்துகளும் பாடல்களில் கொப்பளித்துப் பாய்கின்றன.

விலை : உருபா 3:

மேற்கண்ட நூல்கள் கிடைக்குமிடம் : கனிமொழி பதிப்பகம், கிருட்டிணராயபுரம் : 639105 திருச்சிமாவட்டம்.

Scanned with CamScanner

6. வெண்தாடி. (பாவியம்)
ஆசிரியர் 'கன்னல்'

சீர்திருத்தமும், பகுத்தறிவும் இணைந்து பின்னப்பட்ட ஒரு காதல் கதையை அடிப்படையாகக் கொண்டு பாடப் பெற்ற பாவியநூல் இது. அழகிய இனிய மரபுப் பாடல்கள். கதைக் கிடையில் தந்தை பெரியாரின் கருத்துகள் சொற்பொழிவாக வருவதும், அதையொட்டிய கருத்துகளே கதைப்பாடலுக்கு உயிரளிப்பதும் நோக்கி, இப்பாவியம் 'வெண்தாடி' என்று பெயரிடப்பட்டுள்ளது, எண்சீர் நிலைமண்டில யாப்பிலேயே நூல்முழுதும் சிறந்து திகழ்கிறது. தெறிப்பான கருத்துகள் உயிர்ப்பான சொற்கள்! உணர்வுள்ள பாடல் அடிகள்!

விலை. உருபா 3. பக்கம்: 56
கிடைக்குமிடம்: தமிழ்ப்பாசறை.
70. தெற்கு நரசிம்மபுரம், கருவூர் 639001.

நிலாமுற்றம்: (பாடல் தொகுப்பு)

பாவலர் வேலூர் ம நாராயணன், க. மு. அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல் இது. வேரும் விழுதும் என்னும் பகுதியில் 13 பாடல்களும், சிலையும் உளியும் என்னும் பகுதியில் 15 பாடல்களும், யாழும் குழலும் என்னும் பகுதியில், 11 பாடல் களும், தமிழோடு வாழ்பவர்கள் என்னும் பகுதியில், 10 பாடல் களும், வண்ணமலர்கள் என்னும் பகுதியில், 11 பாடல்களும், தனிப் பகுதியில், 16 பாடல்களும், ஆகமொத்தம் 76 பாடல்கள் கொண்ட தொகுதி இது! பாடல்கள் யாவும் புதுமைப் பொலிவும், கருத்துச் சிறப்பும், இனிமை நலமும், எழில் வடிவமும் கொண்டு திகழ்கின்றன. உவமைப்பாவலர் சுரதா அவர்களின் பாராட்டுப் பாடலும், பர். சி. பாலசுப்பிரமணியம் அவர்களின் பாராட்டுத் திறனாய்வுரையும், திருக்குறள் பதின்கவனகர் பெ. இராமையா அவர்களின் வாழ்த்துப் பாடலும், நூலுக்கு அணி சேர்க்கின்றன. பாவலரேறு அவர்கள் தம் மதிப்புரையில்; பாவலர் அவர்களை 'துணிவான கருத்துகள் விளையும் கழனி' என்றும் 'அவரோர் உணர்வு வெள்ளம்! உழைப்பின் உருவம்' என்றும் 'அவரின் அசைவு ஒவ்வொன்றும் இந்த இனத்தை ஈடேற்ற வல்லது' என்றும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 110 விலை உருபா 8.
கிடைக்குமிடம்: நிறைவானன் பதிப்பகம் 'தமிழ்ச்சோலை'
57: சர்க்கார் மண்டிவீதி, வேலூர் வ. ஆ.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்துகாணவும், கண்டு பேசவும், விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

Scanned with CamScanner

இலங்கை வரலாற்றுப் பின்னணி!

பழந்தமிழ் நாடு, செந்தமிழ் நாடும் கொடுந்தமிழ் நாடும் என இரு பிரிவாகப் பிரித்து பேசப் பெற்றது. அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு என்று குறிக்கப் பெற்றுள்ளன அவற்றைக் கீழ்வரும் பழமபாடலால் அறியலாம.

சிங்களம் சோனகம் சாவகம்
சீனம் துளுக்கடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம்
தெலுங்கம் கலிங்கவங்கம்
கங்கம் மகதம் கவுடம்
கடாரம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி
னேழ்புவி தாமிவையே!

ஈழம் என்பது சிங்களத்தின் மறு பெயராகும் என்பது இலக்கண விளக்கம் 'செந்தமிழ் நிலஞ்சேர்' என்னும் நூற்பாவுரையால் அறியப்படும். சிங்களம்' என்னும் பெயர், சிங்கவாகுவின் மகன் விசயன், தன் தந்தையின் பெயரடிப்படையாகக் கொண்டு அமைத்ததென்பது பொருந்தாது. சிங்கவாகுவின் மகன் இலங்கைக்கு வந்தது இன்றைக்கு ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன் உள்ள பாரதத்தில் சிங்களம் என்னும் பெயர் வந்துள்ளது. இப்பெயர் அங்குப் பேரளவில் விளையும் கறுவாய்ப்பட்டையால் வந்தது என்பதே பொருந்துவதாகும். இலக்குமன் இராமச்சந்திர வைத்திய பண்டிதர் என்பார் எழுதிய சமற்கிருத-ஆங்கில அகர முதலியில் சிங்களத் துவீபம் என்பதற்குப் பட்டைத்தீவு என்றே பொருள் தரப் பெற்றுள்ளது.

இனி, சிங்களம் என்னுஞ் சொல்லால் இந்நாடு குறிக்கப் பெறுவதை விட, இலங்கை, ஈழம் என்னுஞ் சொற்களால் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப் பெறுவதே பெருவழக்காக உள்ளது.

'தொல்லிலங்கை கட்டழித்த —சிலப். 2.35 :3.
'பெருமா விலங்கை' —புறம்: 176-6.
'இலங்கைக் கிழவோன்' —புறம்: 379-6.
'தொல்மா விலங்கை' —சிறுபாண்-119.
'இலங்கையில் எழுந்த சமரம்' —சிலப்.26-238.
'ஈழத் துணவு' —பட்டினப்-191.
'ஈழம்' முத்தொள்,26-3.

முதலிய குறிப்புகளால் இதனை உணரலாம். இவ்வாறாகப் பல வகை இலக்கியக் குறிப்புகளாலும், பற்பல வரலாற்றுக் குறிப்புகளாலும், இலங்கைக்கும் சிங்களவர்க்கும் உள்ள தொடர்பை விட அல்லது உரிமையை விட, அதற்கும் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பே மிகுதி என்று நிலைநாட்டலாம். சேர மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், தொண்டை மண்டிலம் என்று மண்டிலப் பெயர் கொண்டு வழங்கும் நாடுகளுள் ஈழ மண்டிலம் என்பதும் ஒன்றாகப் பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப் பெறுகிறது.

விசயன் இலங்கைக்கு வந்த கி. மு. 543க்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே, அந்நாடு தமிழ் மக்கள் குடி கொண்டிருந்த நாடாக இருந்தது என்பர் பெர்டோலாக்கி (Bertolocei) பென்னட் Bennet) ஆகிய ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள். அந்நாட்டில் வழங்கும் பல ஊர்களின் பெயர்கள் இன்றும் தூய தமிழ்ப் பெயர்களாகவே விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக பாலாவி, மாதோட்டம், மாந்தை, சிலாபம், குசலை, உடைப்பு, ஆனை மடு பள்ளம், கற்பிட்டி, குதிரை மலை. வில்பற்று, முசலி, மன்னார், மூதூர், கந்தளாய், பன்குளம், திறப்பனை, குச்ச வெளி, நிலா வெளி, பச்சிலைப் பள்ளி, கரைச்சிக் குடியிருப்பு, முள்ளிய வளை, குமணை, உகந்தை, அம்பாறை, நல்லூர், அரிப்பு, வெருகல் (ஆறு), பருத்தித் துறை, புத்தளம், வதுளை, கண்டி, கதிர்காமம், கொழும்பூ (இதுவே பின்னர் கொழும்பு என்றானது), சிலாத்துறை, சுண்ணாகம், செம்பியன் பற்று, ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத் தீவு, மண்டைத் தீவு, வேலணை, காரைத் தீவு. எழுவைத் தீவு, அனலைத் தீவு, புங்குடு தீவு (இதுவே பொன் கொடு தீவு என்பதன் மருவாதல் வேண்டும்) நெடுந் தீவு, பாலைத் தீவு, மாங்குளம், அருவியாறு, ஆனைமேடு, களுத்துறை அலம்பில், வப்புவெளி, செங்கலம், கோட்டைமுனை, பொலனறுவை மட்டக்களப்பு, தும்பளஞ்சோலை, அக்கரைப்பற்று, வெளிமடை, அப்புத்தளை, வெல்லவாய், புத்தளை, கருக்குப்பனை, முந்நூல், அறுகம் குடா, அம்பாந் தோட்டை, தேவுத்துறை, பாணன்துறை, கமம், முதலிய பரவலான எண்ணிறந்த ஊர்கள் தூய தமிழ்ப் பெயர்களே! மேலும் இவற்றுள் பல பெயர்கள் பண்டைக் காலந்தொட்டே அங்கு வழங்குகின்றன. தேவாரத்தில் பாலாவி, மா தோட்டம், மாந்தை, திருக்கோணமலை, திருக்கேதீசுவரம் முதலிய பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. இலங்கையில் பண்டையில் ஆண்ட சோழ, பாண்டிய அரச வழியினர் மாதோட்டத்தில் கட்டியிருந்த கோட்டை, மிக்க வலிமையும் அழகும் வியப்பும் உடையதென்றும், பெருமரக்கலங்கள் மன்னார் கடலில் வருமாயின் அவற்றைத் தன்பால் இழுத்துக்கொள்ளும் காந்தப் பொறியுடையதாய் இருந்ததென்றும் கூறுவர். (பார்க்க: தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்—கட்டுரை—செந்தமிழ் தொகுதி 8-பகுதி 10) உரோமர் இலங்கையிலே வாணிகம் செய்த காலத்திலேயே,

தமிழர் மாதோட்டத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்தார்கள் என்னும் செய்தி குறிக்கப் பெறுகிறது. (Journal of the Royal Asiatic Society Ceylon Branch 1848 p. 73).

மேலும் பண்டைய நாகர்களுக்கும் இலங்கைக்கும் பெருந் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்றும் கருதப் பெறுகிறது. நாகர்கள் பழந்திராவிடர்கள். இராவணன் நாகர்கள் மரபில் வந்தவனே என்பர். ஒரு காலத்தில், நாகர்கள் இலங்கையிலிருந்து இமயம் வரை ஆட்சி செய்தனர் என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இலங்கை விசயனால் ஆளப்படுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்னரே, அங்கிருந்த அரசர்கள் நாகராயர் என்னும் பெயரைப் புனைந்திருந்தனர் என்றும் தெரிய வருகிறது (Sketches of Ceylon History) இலங்கையிலும் தமிழகத்திலும் நாகபுரம் நாகர் கோயில், நாகப்பட்டினம் முதலிய பெயர் கொண்ட பல ஊர்கள் இன்றும் உண்டு. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் சிங்களவர்களால் **நாகத்தீவு** என்றே வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அரசிழந்த நாகர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் விந்தனைப் பகுதியிலும் நயினார் தீவிலும் போய் ஒதுங்கியிருந்தார் என்பர். மேலும் முதற்கழகப் புலவர் **முடிநாகராயர்** என்பாரும், ஈழத்துப் பூதந் தேவனார் என்பாரும், இறையனாரகப் பொருளுரையைப் பாடங் கேட்ட **இளநாகர்** என்பாரும், அவர் மாணவர் நீலகண்டனாரும் ஈழநாட்டுப் புலவர்களாதல் வேண்டும் என்று அறிஞர் பலர் கருதுவர். யாழ்ப்பாணத்துக்கு **மணற்றி** என்றொரு பெயரும் உண்டு. இன்னும் மாந்தையிலும், மணற்றியிலும் பாண்டியர் போர் புரிந்து பெற்ற கொற்றமும் இறையனார் அகப்பொருட் கோவையிற் கூறப் பெறுகின்றது. மாந்தை என்பது மாதோட்டத்துக்கு அண்மையில் உள்ள ஊர். மணற்றி என்பது மணல் மேடு என்றும் மணற்றிடல் என்றும் ஒரு காலத்தில் வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. இஃதொரு காலம், இலங்கையரசர் பாண்டியரொடும் சோழரொடும் பொருந்திய போர்க்களமாக விருந்தது. இதன் பகுதிகளுள் ஒன்று இன்றும் **களபூமி** என்னும் பெயரால் வழங்கும். மாந்தையிலும் மணற்றியிலும் கி.மு. 103-இல் ஒரு பெரிய போர் நடந்ததென்றும், அப்போரில் பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன் மனைவியையும் புத்த கலத்தை(பாத்திரத்தை)யும் கவர்ந்து கொண்டு போனதுடன், ஈழநாட்டையும் தமதடிப்படுத்திப் போயினர் என்றும் **மகாவம்சம்** கூறுகிறது.

"இன்னும் சிலப்பதிகார உரையாசிரியர் **அடியார்க்கு நல்லார்** ஈழ நாட்டார் எனப்படுவார். அவர் குணபூசன சிங்காரிய அரசர்க்கு அமைச்சராயிருந்து, ஈழநாட்டில் பல அறச்சாலைகளும், கல்விக் கூடங்களும் அமைத்தார். அஃது **அடியார்க்கு நல்லார்**

குளமென வழங்குகின்றது. அது வண்ணைச் சிவன் கோவில் சந்நிதித் தெருவில் உள்ளது. அதற்கயலிலே அவர் தம் அரசன் பெயரால் அமைப்பித்த குளம் **ஆரியகுளம்** என இக் காலத்து வழங்குகிறது. அவர் இருந்த மனைநிலமும் அவர் பெயராலேயே வழங்குகின்றது. அவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழர் மிகப் பேரளவில் இருந்தனர். அவரே அறுபத்து மூன்று நாயன்மார்களும் கோவிலும்; பூசைக் கட்டளையும் யாழ்ப்பாணத்தில் வகுத்தவர். அக் கோவில் இருந்த இடம் 'நாயனமார்கட்டு' என்று இன்றும் வழங்குகின்றது. அடியார்க்கு நல்லார், நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவர். (தமிழ்ச் சங்கமும் ஈழநாடும் கட்டுரை 'செந்தமிழ்' தொகுதி 8; பகுதி 10)

மேலும், யாழ்ப்பாணத்திலுள்ள செம்பியன் பற்று, பல்லவ ராயன் கட்டு, தொண்டைமானாறு, பாண்டியன் தாழ்வு முதலிய இடப் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ்நாட்டு வேந்தர்கள் யாழ்ப்பாணத் தொடர்புடையவர்களாயிருந்தனர் என்பது நன்கு துணியப்படும். இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரை மலை மிக்க பழமையும், யவனநாடு வரையும் பரந்த புகழும் உடையது. அஃதொரு காலம் சிற்றரசருள்ளே எழினியும் பிட்டங்கொற்றனும் புறநானூற்றில் பாடப் பட்டோராவர். (மேற்படி கட்டுரை.)

இவ்வாறான பல இலக்கிய, வரலாற்றுச் செய்திகளால், இலங்கையைத் தொடக்கத்தில் தமிழினத்தவரின் முன்னோர்களே ஆண்டிருந்தனர் என்பதும், இடையில் கி.மு. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டளவிலேயே ஆரிய இனத்தவரான சிங்களவர்கள் வட இந்தியாவினின்று வந்து அங்குக் குடியேறித் தமிழ் அரசர்களுடன் சண்டையிட்டு அந்நாட்டைக் கைப்பற்றினர் என்பதும், அதன் பின்னரும் அந்நாடு தமிழர் கைக்கும் சிங்களர் கைக்கும் மாறி மாறி ஆட்சிக்கு வந்ததென்பதும், இறுதியில் கி.பி. 1070 வரை இலங்கை முழுவதும் இராசேந்திர சோழனால் ஆளப்பெற்றதென்பதும், அதன் பின்னரே போர்த்துக்கீசியர் அதனைக் கைப்பற்றி ஆண்டனர் என்பதும் தெரிய வருகின்றன.

இவ்வகையில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் நெருங்கிய கலை, பண்பாட்டு, சமய, குமுகவியல், மாந்த உறவுகள் உண்டு என்று வரலாற்றுப் பேராசிரியர் பலரும் அறுதியிட்டுக் கூறு கின்றனர். இதற்கான அகப்புறச் சான்றுகள் வடமொழி, பாளி, தமிழ் ஆகிய மும்மொழி இலக்கியங்களிலும் பரந்து கிடக்கின்றன.

இவ்வாறு, பலவகையிலும் தமிழர்கள் வாழ்ந்திருந்த, அவர் களின் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்த தொன்மை நிலமாகிய இலங்கை தமிழர் கை களினின்று சிங்களவர் கைக்கு வருவதும் பின் சிங்களவர் கை

களினின்று தமிழர்கைக்கு மாறுவதுமாக இருந்து, அதன் பின்னர் சடந்த 500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து போர்த்துக்கீசியர், ஆலந்துக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் கைகளில் தவழ்ந்து, இறுதியில், இன்று சிங்களவர் கைகளில் வந்து தங்கியுள்ளது. ஆங்கிலேயர்கள் ஆட்சி 1796 முதல் 1948 வரை இருந்தது.

இறுதியாகப் பிரிட்டிசுக்காரர்கள் ஆளும் போதுதான், பல அதிகார ஆளுமை ஏந்துகளுக்காக 1833-ஆம் ஆண்டு, சிங்களவர் ஆளுகையிலிருந்த சிறிலங்காவையும், தமிழாகள் ஆளுமையிலிருந்த தமிழ் ஈழப் பகுதியினையும்—முதன் முதலாக ஒரே ஆளுமையின் கீழ்க் கொண்டு வந்தார்கள். அதன்பின் 1948-இல் அவர்கள் இலங்கையை விட்டு நீங்கும் பொழுது, எப்படி இவ்விந்திய நாட்டை அவர்கள் வட நாட்டுக்காரர்கள் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போனார்களோ, அதே போல் அவர்கள் சிங்களவர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுப் போய்விட்டனர். இலங்கையைப் போர்த்துக்கீசியர் கைப்பற்றும் வரை, வடக்கு, கிழக்குப் பகுதி களில் தமிழராட்சியும் அங்கு இருந்துதான் வந்தது, கி.பி. 1070 வரையிலும் கூட இராசேந்திர சோழன் இலங்கை முழுவதையும் ஆட்சி செலுத்தி வந்த வரலாறு உண்டு. சிங்கள இனத்தின் மூலவர்களாகக் குறிக்கப் பெறும் விசயனும் அவனைச் சேர்ந்தவா களும் இத் தீவில் காலடி எடுத்து வைத்த பொழுது தமிழர்கள் இலங்கையின் நிலப்பரப்பெங்கும் பரவலாக வாழ்ந்திருந்தனர். விசயன் அப்பொழுதிருந்த ஒரு பாண்டியனின் மகளையே மணந்து கொண்டான் என்பர். அதன பின்னர் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வந்து தங்கி வாழலாயினர். சிங்கள வர்கள் தெற்குப் பகுதியிலும் தென் மேற்குப் பகுதிகளிலும் செறிந்து வாழ்ந்து வந்தனர்.

இலங்கையில் போர்த்துக்கீசியரின் ஆட்சி கி.பி. 1619 முதல் 1638 வரையில் இருந்தது அதன் பின் ஆலந்துக்காரர் போர்த்துக் கீசியரைப் படிப்படியாக விரட்டி விட்டு 1795 வரை ஏறத்தாழ நூற்று எழுபது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இறுதியாக 1796 முதல் 1947 வரை, நூற்றைம்பது ஆண்டுகள், பிரிட்டிசுக்காரர்கள் இலங்கை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டு வந்தனர். பிரிட்டிசாரின் ஆட்சிக் கால இடையில் அஃதாவது 1829 இல்தான் இலங்கையில் சிங்களவர்களையும், தமிழர்களையும் தனித் தனியாக ஆண்டு வந்த இரட்டையாட்சி முறையை, ஆளுமை ஏந்துகளுக்காக, ஒற்றையாட்சி முறையாக அமைக்கக் 'கோல்புறுக்' ஆணைக்குழு ஒன்றை அமைத்து, இலங்கையைப், பல மாவட்டங்களாகப் பிரிக்கவும், ஒரே நயன்மை (நீதி) அமைப்பாக இணைக்கவும் முயற்சிகள் தொடங்கப் பெற்றன. அதன்படி 1833 இல் ஒற்றையாட்சி முறைக் கொண்டு வரப்

பெற்றது. 1948 பிப்ருவரி 4-ஆம் நாள் பிரிட்டிசுக்காரர் இலங்கையிலிருந்து, தங்கள் ஆளுமையைப் பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போன பொழுதும், இந்த ஒற்றையாட்சி முறை அப்படியே தொடர்ந்தது. அதற்குப் பின் சிங்களவர்கள் தங்களின் பெரும்பான்மை வலிவைப பயன் படுத்திக் கொண்டு, தமிழ்நிலப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதும், மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைப் பதும், தங்கள் மொழிக்குப் பலவகை ஏற்றங்கள் தேடுவதும், தங்கள் இனத்தாரையே படைத்துறை ஆளுமைத்துறை போன்ற வற்றில் அமர்த்தித் தங்கள் வல்லாண்மையைப் பெருகச் செய்வது மான முயற்சிகளில் ஈடுபட்டுத் தமிழ் மொழியையும் தமிழினத் தையும் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளி, வலிவிழக்கச் செய்து வந்தனர்; வருகின்றனர்.

இக்கால் உள்ள இலங்கை 25,332 சதுரக் கற்கள் கொண்ட நாடு. இன்றைய நிலையில் இதன் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடியே முப்பத்தைந்து இலக்கம். இதில் தமிழர்கள் ஏறத்தாழ 28 இலக்கம் பேர். இது, இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரு மாக சேர்ந்த தொகையாகும் இலங்கைத் தமிழர்கள் என்பவர்கள் தொன்மைக் காலம்முதல் இலங்கையிலேயே இருந்துவரும் குடி மரபைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏறத்தாழ 15 இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் மன்னர், யாழ்ப்பாணம், திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு முதலிய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இந்தியத் தமிழர்கள் எனப்படுவர் ஏறத்தாழ 13 இலக்கம் பேர் உள்ளனர். இவர்கள் கண்டி, நுவரேலியா, மாத்தளை, கேகாலை முதலிய (நாட்டின் நடு பகுதியான) மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்று அழைக்கப் பெறுகிறார்கள்; இந்தியத் தமிழர்கள் எனப்பெறும் இம் மலைநாட்டுத் தமிழர்கள் பெரும்பாலும், பிரிட்டிசுக்காரர்களின் ஆட்சிக் காலத்தில் 1837- இலும் அதற்குப் பின்னும் மலைப்பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென்று தமிழகத்தின் சிற்றூர்ப் புறங்களினின்று கங்காணிகளால் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டவர்களாவர். இவர்கள்தாம், அன்றிலிருந்து இன்று வரை தேயிலைத் தோட்ட ஆங்கிலேய, சிங்கள முதலாளிகளால் அடிமைகளைப் போல் நடத்தப்படுபவர்கள். இவர்களுக்குக் குடி யுரிமை கிடையாது. நல்ல வீடு வாய்ப்புகள் இல்லை. வாழ்க்கை ஏந்துகளற்ற நிலையில் விலங்குகளைப்போல் தோட்டக் காடுகளில் சிறு சிறு ஓட்டைக் குடியிருப்புகளில் வாழ்கின்ற தமிழர்கள் இவர்கள். இந்தியாவிலிருந்து குடியேறிச் சென்ற தமிழர்களா யிருந்தாலும் இலங்கைத் தமிழர்களுடன் இனத்தாலும் மொழியாலும் பண்பாட்டாலும் தொடர்பும் பிணைப்பும் உடையவர்கள். இன்று

(அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து சமயம்

சிந்தனைச்செம்மல் . கு.ச.ஆனந்தன்

"அவன் (வெள்ளைக்காரன்) மட்டும் இந்து என்று பெயர் வைத்திருக்காவிட்டால் ஒவ்வோர் ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருக பக்தர் எல்லை அம்மனைக் கும்பிடுகிறவர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம் . . . . சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் ஒரே சாமி இருக்கிறதா? இல்லை . . . . . வைணவர்களுக்கு சிவன் சாமியே அல்லன். சைவர்களிலும் தீவிரவாதிகள், விட்டுணு சாமியே அல்ல; சிவன்தான் சாமி; விட்டுணு சிவனுக்கு பக்தன் என்று சொல்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரையும் எப்படி ஒரு மதம் என்று சொல்வது?" (10) என்கிறார். இந்து மத அடிப்படையைத் தகர்த்தெறிவதே மக்களது முதற்பணியாக இருக்கவேண்டுமெனக் கட்டளை இடுகிறார் பெரியார் அவர்கள். ஆனால் பொதுவுடைமைக் காரர்களோ இந்துமதம் விளைவித்துவிட்ட குமுகாயக் கொடுமைகளைக் தெளிவாகப் புரிந்திருந்தும், சாதியமும், வருண அமைப்பு முறையும், குமுகாய ஏற்றத் தாழ்விற்கு அடிப்படையான அமைப்புகள் என்பதை அறிந்திருந்தும் கூட, பிரிவு வேறுபாடுகள் என்ற தம் கண்ணோட்டத்திற்கு ஏற்றமுறையில், பொருளியல் சமநிலை, புரட்சிமூலமாக ஏற்பட்டால், குமுகாய மாற்றமும் தானாகவே நிகழ்ந்து விடும் எனத் தவறாகக் கணிக்கின்றனர். ஆனால் இந்தியச் சூழலுக்கும், தனித்தன்மைகளுக்கும், வரலாற்றின் வளர்ச்சிநிலைக்கும் ஏற்றவகையில் பொருளியல் சமநிலைக்கு முன்னோடியாக அல்லது இணையாகக் குமுகாயச் சமநிலை உருவாக்கப்படவேண்டும், எனப் பகுத்தறிவுத் தந்தை, புதிய புரட்சிக்கொள்கையை வகுத்தார். அது இந்து மதத்திற்கு சாவுமணி அடிப்பதாகும்.

"பொது உடைமை வேறு; பொது உரிமை வேறு. பொது உடைமை என்றால் பொருளியல் துறையில் ஒருவனுக்குரிய **சமபங்கு**; பொது உரிமை என்றால் குமுகாயப் புலத்தில் ஏற்றத் தாழ்வை அகற்றும், சமதுய்ப்பு நிலை", பிரிவு (வர்க்கம்) முன்னதின் எதிரி; சாதி, பின்னதின் எதிரி. பிரிவு (வர்க்கம்) வேறு; சாதிவேறு; பிரிவு (வர்க்கம்) பொருளியல் காரணங்களால்-ஏறத்தாழ்வுகளால் ஏற்படுவது; சாதியோ வருணச்சிரம அமைப்பால்-பிறப்பால்-இந்துச் சாத்திரங்களால் ஏற்பட்டது. சாதியம் என்ற அமைப்பு முறை அனைத்து உலக மட்டத்தில் எந்த ஒரு நாட்டிலும் இல்லை. அங்கெல்லாம் சாதி இல்லாததால் பொருளியல் அடிப்படையைக் கொண்ட பிரிவு (வர்க்க)ப் புரட்சி முதலில் தோன்றியது. இந்தியாவில் சாதி நிலையாக்கப்பட்டிருப்பதால், பகுத்தறிவுப்

Scanned with CamScanner

புரட்சியே-இந்துமத எதிர்ப்புப் போராட்டமே-முதல் தேவை. சாதி ஒழிப்பு இல்லையென்றால், குமுகாய ஏற்றத்தாழ்வு பிறப்பின் அடிப்படையில் நிலைத்துத் தங்கிவிடும். சாதியம் அல்லது குமுகாய ஏற்றத்தாழ்வு அகலாத பொருளியல் சமவாய்ப்பு, தமிழக மக்களிடையே கடுகளவு மாற்றத்தையும் விளைவித்து விடாது. ஆக இந்துமதம் சிலருக்கு மட்டும் தரும் 'தனிஉரிமையை' முதலில் ஒழித்து, 'தனி உடைமையை'ப் பின்னர் ஒழிக்க வேண்டும்.". (11) என்பதே தந்தை பெரியாரின் குமுக மாற்றத்திற்குரிய இசைவுக் கருத்தும் கொள்கையும், அணுகுமுறையும் ஆகும்.

இந்து மதம் சாதியத்தையும், வருண வேறுபாட்டையும், பார்ப்பனீயத்தையும் கொண்ட ஒரு பிற்போக்கு ஏமாற்றுக் கலப படம். இந்து மதம் முதலாளியத்திற்கும் சுரண்டலுக்கும் காவலனாக நிற்கிறது. மக்களை எல்லாவகைச் சுரண்டல்களிலிருந்தும், ஆளுமை (ஆதிக்கங்)களிலிருந்தும் குமுகாய ஏற்றததாழ்விலிருந்தும் முற்றாக விடுதலை செய்யவேண்டுமானால் சாதிய அமைப்பை முதல் நிலையில் உடைத்தெறிய வேண்டும். இந்து மத அடிக்கட்டமைப்பை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் பார்வையில் படும் இந்துமதம்.

ஆனால் திராவிட இயக்கம், தற்போது பிளவுண்டு பல திராவிட இயக்கங்களாகிவிட்டன. எனவே இன்றுள்ள "திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துமதம்" எப்படிக் காட்சியளிக்கிறது என்பதை இனி ஆராய்வோம்.

விடுதலை இயக்கத்தின் வித்துகள் தூவப்பட்ட காலப்பகுதி; வெளிநாட்டில் கற்றறிந்த இளைஞர்கள் சிலர் வெள்ளை மேலாளுமையை எதிர்க்க ஒரு புரட்சி இயக்கம் காணத்துடித்த நேரம்; அதனைத் தவிர்த்திட வெள்ளைக்காரர் திரு. ஹியூம் அவர்களால் 1885 ஆம் ஆண்டில் அனைத்து இந்திய தேசியப பேராயம் (காங்கிரசு) தோற்றுவிக்கப பட்டது. "அரசு ஊழியங்களை, இந்தியர்க்கும் வழங்கிடவேண்டும்; மாகாணச் சட்ட மன்றங்களில் மக்கள் படிநிகராண்மையை (பிரதிநிதித்துவத்தை) மேலும் விரிவாக்கிட வேண்டும்" போன்ற குரல்கள் வலிவாக ஒலித்தன. விளைவு? அரசுப் பதவிகளில், பல பார்ப்பனர்கள் இடம் பெற்றனர். கல்வியிலும், குமுகாயத்திலும் பினதங்கிய பார்ப்பனர் அல்லாதாரோ, அரசுத் துறையிலும் உரிமையற்றுக் கிடந்தனர். ஆண்டுகள் உருண்டன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உயர்வருண ஆளுமை (ஆதிக்க) எதிர்ப்புணர்ச்சி தமிழகத்தில் மெல்ல முளை விட்டது. 1912-ஆம் ஆண்டில் "**சென்னை மாகாண திராவிடர் சங்கம்**" என்ற ஓர் இயக்கம் முதன் முதலாக உருவாயிற்று.

வெறும் ஆய்வு நிலையில் மட்டுமிருந்த ஆரிய-திராவிட நாகரிகங்களை மோகன்சோதாரா, ஆரப்பா கண்டுபிடிப்புகள், மூலநிலைச் சான்றுகளாகி மூதளித்தன. '"திராவிடர்" என்ற இனஉணர்வை' அமைப்பு நிலையில் பெற அவை துணை செய்தன.

1916 ஆம் ஆண்டில் **"தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்'** தோன்றியது. அது, பார்ப்பனர் அல்லாதாரின் அரசியல் மற்றும் குமுகாய உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற வலிவான முதல் அமைப்பாகத் திகழ்ந்தது. கல்வித்துறை, குமுகத்துறை, அரசு அலுவல்கள், பதவிகள் போன்றவற்றில் பார்ப்பனர் அல்லாதாரின் தகுநிலையை மீட்டுத்தரும் திட்டங்களுடன் அச்சங்கம் செயல்பட்டது. திராவிட இயக்கம் வளர்ந்து, பிரிந்து, தளர்வெய்திய இன்றைய கால நிலையில், **"பிராமணச் சங்கங்கள்'**, முளைத்து வளர்வதைக் காண்கிறோம். ஆனால் திராவிட இயக்கத்தின் 'கரு' உருவான பொழுது, தமிழகத்தில் நிலவியிருந்த வரலாற்றுச் சூழ்நிலை முற்றிலும் வேறாக இருந்தது. வைதீக மதத்தின் நீண்ட வளர்ச்சி தந்த குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் ஆளுமை (ஆதிக்க) நிலையை, "திராவிட உயர்வு" என்ற வெறும் எதிர் நீரோட்டத்தால் மட்டுமே அழித்துவிட முடியுமா என்ற ஐயமும் உறுதியற்ற நிலையும் நிலவியிருந்தன. முதன் முதலாகப் பொங்கி எழுந்த உணர்ச்சியையும் அந்நிலை மங்க வைத்துக் கொண்டிருந்தது என்றால் மிகையாகாது.

வருணாசிரமத்திற்கு எதிரான விழிப்புணர்ச்சியை, முளையிலேயே கிள்ளியெறியும் நோக்கத்துடன், பல பார்ப்பனிய அமைப்புகளும் அன்று பரவலாக இயங்கி வந்தன. அப்போது இந்திய நாடு விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமும் கூட தெளிவாக உருவாகவில்லை ஆனால் குமுகாய ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி இன உணர்வுடன் மெல்லச் சிந்திக்கத் தொடங்கியதும்-பல காலம் நிலைத்து விட்ட சாதியத்தை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துகள், மெல்ல முகிழ்க்கத் தொடங்கியது. **"இந்து மதம்"** என்ற பெயரால் புரையோடிவிட்ட மூடப் பழக்கங்களையும், சமயச் சடங்கு, மரபுகளையும் முனைந்து பரப்பும் பெரும் பணியில். அந்தப் பார்ப்பனிய அமைப்புகள் தீவிரமாக ஈடுபட்டன. **"வருணாச்சிரம பாதுகாப்புச் சங்கம்"**, **"சனாதன தர்ம சங்கம்"**, **'சனாதனச் சங்கம்"**, போன்ற பல சங்கங்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் 1900 முதல் 1920 ஆம் ஆண்டுவரை பீடுநடைபோட்டு வந்தன. சிற்றூர்களிலும் கூட அவை தோற்றுவிக்கப்பட்டன. வைதீக மதத்தின் வேர்ப்பகுதியான நால் வருணப் பிரிவுகளைக் கட்டிக் காப்பதும்; வேத, ஆகம, இதிகாச, புராணக் கருத்துகளைத் தந்நல விளைச்சலுக்கேற்ப, திறமையோடு நிலைபெறச் செய்வதும்; நோன்புகள், (விரதங்கள்) போன்றவற்றை வளர்க்கும் வகையில் 'பக்தி மார்க்கத்தைப்' பரப்புவதுந்தாம் அச்

Scanned with CamScanner

சங்கங்களின் செயல்திட்டங்களாயிருந்தன. மக்களிடமிருந்த மூட (மௌடீக) நிலை, அவற்றிற்குப் பொதுவாக வாய்ப்பாக (சாதகமாக) இருந்தன.

தொடக்கநிலையில் இருந்த பேராய(காங்கிரசு)க் கட்சியும், தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையும் பிற்போக்குப் பாசறை என்று சாடிப் பொதுமக்களிடையே அதனைக் கீழ்ப்படுத்த முனைந்து நின்றது. என்றாலும், முதற்கட்ட வளர்ச்சியில் அடியெடுத்து வைத்த திராவிட இயக்கம் சாதி ஒழிப்பு, குமுகாய மாற்றம், தன்மான உரிமை, பார்ப்பனீய எதிர்ப்பு என்பவற்றை மூலப் பொருட்களாக்கி வல்லாண்மை ஆற்றல்(ஆதிக்கச் சக்தி)களையும், சாதிய அமைப்பையும். நிலையான சுரண்டலையும், முற்றாக ஒழிக்கப் போரர்டி வந்தது.

''1917-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம்'' வழங்கிய குறுகிய உரிமைகொண்ட குடியாட்சி மன்றங்களில் அதிக இடங்களைப் பெற்ற நீதிக் கட்சிக்கு, ''இரட்டை ஆட்சியில்'' நடைபோட வாய்ப்பேற்பட்டது. அறநிலையத் திருத்தங்களையும், வகுப்புரிமைப் படி நிகராண்மைக் கொள்கையையும், வருணாச்சிரமத்தை எதிர்க்கும் வேறு சில வழிவகைகளையும் முதல்நிலையில் செயல் படுத்திற்று

''மாந்த அமைப்பின் கவலையற்ற நல்வாழ்வுக்கும் திராவிடரின் தன்மான வாழ்க்கைக்கும் தன் மதிப்பு (சுயமரியாதை)க் கொள்கை தான் வழிவகுக்கும்'' என்ற பொதுக் குறிக்கோளை நடுவாக வைத்து, 1925 ஆம் ஆண்டில், **'சுயமரியாதை இயக்கம்' தந்தை பெரியார் அவர்களால்** தோற்றுவிக்கப்பட்டது. அது இந்து மதத்தை அதன் சாத்திரங்களை-சடங்கு முறைகளை-மூடநம்பிக்கைகளை-சாதிப்பாகுபாடுகளை-செல்லரித்துப்போன பழைய பண்பாடுகளை-வேரோடு கல்லி எறிந்து அதன் ஆளுமை ஆற்றலாக (ஆதிக்க சக்தியாக) விளங்கும் பார்ப்பனியத்தை ஒழிக்கும் 'பகுத்தறிவு இயக்கமாக' மலர்ந்தது. அது திராவிட இயக்கத்தின் இரண்டாவது கட்ட வளர்ச்சியாகும்.

குமுகாயப் புரட்சியின் அடிப்படைக் கொள்கைகள் அமைதியான முறையில் மக்கள் மன்றங்களில், எடுத்துவைக்கப்பட்டன. 1929-ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் இந்துமதத்தை எதிர்க்கும் மூலமுழக்கம் ஓங்கி ஒலித்தது: ''மக்களில், பிறவியின் காரணமாக உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கையை, இம்மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கும் மதம் வேதம், சாத்திரம், புராணங்களையெல்லாம் பொதுமக்கள் பின்பற்றக் கூடாது' என்றும்; ''வருணாச்சிரமம்'' என்ற கொடுமையான கட்டுப் பாட்டையும் குமுகாய அமைப்பில் காணப்படும் பிராமணர், சூத்திரர், சத்திரியர், சூத்திரர், பஞ்சமர் என்ற ஏற்றத்தாழ்வுப் பிரிவுகளையும், ஏற்றுக் கொள்ளக் கூடாது',

என்றும்; "தீண்டாமை' அழிய வேண்டும்" என்றும்; பெண்கல்வி, பார்ப்பனர் அல்லாத இளைஞர் சங்கம், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் பொதுவிடங்களில் சாதி வேறுபாடுகள் காட்டப்படக் கூடாது என்பவை பற்றியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. இந்துமதப்பிடியிலிருந்து, திராவிடர்களை விடுவிக்க பெரியார் ஈ.வே.ரா.அவர்கள், அந்தச் சீர்திருத்த இயக்கத்தின் தலைவராகத் தொடர்ந்து விளங்கினார்.

காந்தி அடிகளின் வருணக் கொள்கைகளையும், இந்துமத மரபு களையும் அடுத்து வந்த பல மாநாடுகள் வன்மையாகக் கண்டித்தன' 'இந்து மதம் என்று ஒருசமயம் இயல்பாகத் தோன்றவில்லை. என்றுமே இருந்ததில்லை; வேதகாலத்திய வைதீக மதம்தான் பின்னர் கலவைச் சமயமாகிக் கோணல் கொண்ட குமுகாயத்தை, குலநீதிவொழுக்கத்தைக் கொண்ட, அமைப்பு முறையை உருவாக்கி வளர்த்துவிட்டது" என்ற உண்மை வரலாற்றை முதன் முதலாக அவ்வியக்கம் உலகுக்கு எடுத்துக்காட்டியது. பொதுஉடைமைக் கொள்கையையும், பகுத்தறிவுப் பாதையையும் குமுக மாற்றம் காணும் சீரிய வழிவகைகள் என்ற புரட்சிக்கனல் தெறிக்கும் புதிய சிந்தனைகளையும், தமிழக மக்களின் நெஞ்சங்களில் தீவிரமாகப் பரப்பிற்று. குமுகாய மாற்றத்திற்குரிய சிறப்புக் கூறுகளாகவும் அவற்றை ஏற்றுச் செயல்பட்டது.

அனைத்திந்திய அரசியற் சூழலை அடிப்படையாகக் கொண்டு, எல்லாத் துறைகளிலும் விடுதலை வாழ்வுபெற அன்றிருந்த சென்னை மாகாணத்தை இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிவினை செய்ய வேண்டும் என்ற தனிநாட்டுக் கொள்கையையும் பின்னர் மெல்ல ஏற்றுக்கொண்டது. 1939 ஆம் ஆண்டுமுதல் "**திராவிடநாடு திராவிடர்க்கே**" என்ற முழக்கம், சுயமரியாதை இயக்கத்தின் மொத்தச் செயல்முறையை எடுத்து விளக்கிற்று. அதன் வளர்ச்சியில் மூன்றும் கட்டம், இது.

அடுத்து 1941 ஆம் ஆண்டில் "**திராவிடர் கழகமாகக்**" கருவெடுத்தது. 1944 ஆம் ஆண்டு நடைபெற்றசேலம் மாநாட்டில், **பேரறிஞர் அண்ணா** அவர்களின் வரலாற்றுப் புகழ்பெற்ற தீர் மானத்தின் மூலமாக அரசியல், பொருளியல், குமுகாயத்துறைகளில் அனைத்து உரிமைகளைப் பெறும் முழுவிடுதலை இயக்கமாக மலர்ச்சி பெற்றது, இது அதன் நான்காம் வளர்ச்சிக் கட்டம்.

இந்த வரலாற்றுப் பின்னணி விளக்கம் இங்குத் தேவை தானா? ஆம். தேவை தான். ஏன்?

இந்து சமயத்தின் வளர்ந்துவிட்ட குமுகாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், 'மதம்' என்னும் பெயரால் மாந்தம் வதைக்கப் படுவதை வேருடனும், வேரடி மண்ணுடனும் அழித்தொழிப் பதற்கும், அனைத்திந்திய மட்டத்தில் தோன்றிய முதல் அமைப்பு

திராவிட இயக்கந்தான் என்பதை வரலாற்று வழியில் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இந்தச் சிறுவிளக்கம் இங்குத் தரப்பட்டது.

இந்திய நாடு விடுதலையடைந்தும் கூட, சாதிமதங்களின் பெயரால் நடைபெறும், மேலாளுமை (ஆதிக்க)க் கொடுமைகள் அழிக்கப்படவில்லை. அதன் ஒரு பகுதியான "**தீண்டாமை**" மட்டுமே, கொடுமையெனப் பேசப்பட்டது. மக்களை நிலையாகப் பிரித்து வைக்கும் வருணாசிரமத்திற்கும், சாதியத்திற்கும் புதுவாழ்வு கொடுத்தது, **இந்திய அரசமைப்பு** (CONSTITUTION). அவற்றை வெகு எச்சரிக்கையுடன் கட்டிக்காத்து வருகிறது, 'இந்துவை' யாரென்று வரையறை செய்யாத நமது '**இந்துச் சட்டம்**'.

திராவிட நாட்டு விடுதலை இயக்கமாக வளர்ந்த திராவிடர் கழகம், இந்திய விடுதலைக்குப் பின்னர் வலிவானதொரு மக்கள் இயக்கமாக-அரசியல் கட்சியாக-அமைக்கப்படவேண்டிய கட்டாயத் திற்கு ஆட்பட்டது. "**பெரியாரியத்தை**" அரசியல் வழியாகவும் குமுகாய நோக்குடனும் செயற்படுத்துகிற ஒரு தீவிர அமைப்பாகத் "**திராவிட முன்னேற்றக் கழகம்**" தோன்றியது. **பேரறிஞர் அண்ணா** அவர்களின் கருத்துவேறுபாடுகள், பெரியாரின் திருமணம் என்ற காரணங்கள், அன்றைய உடனடிக் காரணங்கள் தாமேயன்றி, மூலகாரணங்கள் அல்ல.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகம், "**குமுகாயத்தில் பகுத்தறிவு அடிப் படையில் மறுமலர்ச்சி காண சீர்திருத்தப் பணி புரிவது**" (12) என்ற செறிவான குறிக்கோளை இந்துமதக் கொடுமைகளை ஒழிக்கும் செயல்முறையாக ஏற்றுக் கொண்டது.

சமயத்தின் துணையின்றியே அறிவியல் கொள்கையையும் ஒழுக்கத்தையும், கடைப்பிடித்து ஒருவன் நிறைவோடு வாழமுடியும். என்ற பண்பு நிலையினையும், இந்து மதத்தால் இறையுணர்வை வளர்க்க முடியும் என்ற மூடநம்பிக்கையும் இனியும் தேவையில்லை; ஒருவன் தனது உளத் தொடர்பை இறைவனோடு எந்த வகையில் விரும்பி ஏற்றுக் கொள்கிறானோ. அந்த உள்ளார்ந்த இறை நம்பிக்கை உரிமையை, குமுகாயத்தின் அனைத்துப் பிரிவினர்க்கும் இந்து மதம் வழங்காது என்பதனையும் இறையுணர்வு கொண்ட பகுதியினருக்கு எடுத்துக்காட்டி, சாதி, மத, ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமநிலைக் குமுகாயத்தை நிறுவுவதற்காக "**ஒன்றே குலம்; ஒருவனே தேவன்**" என்ற அடிப்படைக் கோட்பாட்டை இந்து சமய மெய்மப் பகுதிக்கு மாற்றீடாகத் **தந்தது**. திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் தனது பகுத்தறிவுக் கொள்கையை 'து விட்டுவிடவில்லை.

வாசிப்பது எப்படி?

தஞ்சை பா. இறையரசன்
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

1. வினைச்சொல் பெயர்ச்சொல் ஆகியன ஒரு சொல் தொடரில் தொடர்போடு வருகிற பொழுது அவற்றில் வருகிற பாலறி கிளவிகள் தம்முள் மாறுபடாது வருதல் வேண்டும்.

"வினையின் தோன்றும் பாலறிகிளவியும்
பெயரின் தோன்றும் பாலறிகிளவியும்
மயங்கல் கூடா தம் மர பினவே"

—தொல். சொல். (11)

ஆண், பெண் என்ற இருபாலும், ஒருமை, பன்மை என்ற எண்ணும், உயர்திணை, அஃறிணை என்னும் திணையும் ஆகிய அடிப்படையில் ஐம்பால் என்று பகுப்பர். இவை தம்முள் மயங்கா.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மக்களது பண்பாட்டுப் பகுதியிலும், அறிவுப் புலத்திலும் பெரு மாற்றங்களை விளைவிக்கும் கலை, இலக்கியம், நாடகம், இதழ்கள், மேடை, படக்காட்சி போன்ற அனைத்துத் துறைகளிலும், புதிய எழுச்சியை ஏற்படுத்தியது, தி.மு கழகம். தமிழ், தமிழினம், தமிழ் நாடு, தமிழ் மக்களுடைய அரசியல் பொருளியல், குமுகாய உரிமைகள் ஆகியவற்றைக் காத்திடும் பேரியக்கமாகப் பணிபுரிந்தது.

தி.மு க. தனது நீண்ட வழிச்செலவின் ஒரு வரலாற்றுச் சிறப்புக் கட்டமாக, தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பையும் கைப் பற்றியது. பல சீர்திருத்தக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தியது. செல்லாதிருந்த சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லத்தக்க சட்டமுறையாக ஏற்கப்பட்டது. 1969-ஆம் ஆண்டில் எதிர்பாரா நிலையில், பேரறிஞர் மறைந்தார். கலைஞர் அவர்களின் புதிய தலைமையில் திராவிட இயக்கத்தின் பழைய கொள்கைகள், ஒவ்வொன்றாகச் செயலாக்கப்பட்டன. குமுகாயத் துறையில், வகுப்பு வழிப் படிநிகராண்மையில் அதிக விழுக்காடும், பிற்படுத்தப்பட்டவர்களுக்குரிய தனி அமைச்சகமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாழ்க்கை வசதிகளும், வீடுகளும், கலப்புத் திருமணங்களுக்கு அரசுப்பரிசும் அரசு அலுவல்களில் வாய்ப்பு வழங்குதலும், திருக்கோயில்களில் தமிழில் வழிபாடும், உரிய தகுதிபெற்ற எந்தச் சாதியினரும், பூசகர்(அர்ச்சகர்)களாகலாம் என்ற புரட்சித் திட்டமும் இந்து மத அடிப்படையை முதல்நிலையில் தகர்த்திட, தி.மு.கழக ஆட்சியால் செய்யப்பட்ட சில நிறைவேற்றங்(சாதனை)களாகும்.

1972-ஆம் ஆண்டில், திராவிட இயக்கம் மீண்டும் ஒரு பிளவைச் சந்தித்தது. ம கோ.இரா. (எம் ஜி.ஆர்.) தலைமையில், அதன் சிதைந்த கூறு, தனித்துச் செயல்பட்டது. ஆட்சியையும் கைப்பற்றியது.

(தொடரும்)

Scanned with CamScanner

1. அவன் ஓடினான் * அவன் ஓடினேன்
2. அவள் ஓடினாள் * அவள் ஓடினாய்
3. அவர்கள் ஓடினர் * அவர்கள் ஓடினான்
4. அது ஓடியது * அது ஓடினோம்
5. அவை ஓடின * அவை ஓடினீர்கள்

இரண்டு மூன்று சொற்களாக இயைந்து வரும் பொழுதும், வினைச் சொல்லானது எதனைச் சென்று சார்கிறதோ அதற்கேற்ற பாலறிகிளவி பெற வேண்டும்.

6.	சாத்தன்	குரங்கைக்	கடித்தான்
7.	குரங்கு	சாத்தனைக்	கடித்தது
8.	சாத்தனை	அவள்	பார்த்தாள்
9.	குரங்கை	அவர்	பார்த்தார்

எழுவாயில் வரும் பெயர்ச் சொல்லுக் கேற்ற பாலறிகிளவி வினையில் வருகிறது.

2. "செய்திகள் வாசிப்பது இன்னார்" என அனைத்திந்திய வானொலியில் வழங்கும் சொற்றொடர் சரிதானா? என்பதைக் காண, 'வாசி' என்ற வினை எதனைச் சார்கிறது, எப்படிச் செயற்படுகிறது என்பவற்றைப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஆண்டறிக்கை வாசித்தல், செல்வன் குழந்தைவேல்.

நீளம் தாண்டல் : செல்வியர் செங்கொடி, மலர்விழி, அரசி.

- என வருபவற்றில் வாசித்தல், தாண்டல் முதலிய தொழிற் பெயர்களை வினையாலணையும் பெயராக மாற்றினால்தான் சொல்தொடர்கள் ஆகும்.

வாசித்தல் = வாசித்தல் செய்பவன் (அ) வாசிப்பவன்.

56. ஆண்டறிக்கை வாசிப்பவன் : செல்வன் குழந்தைவேல்

தாண்டல் = தாண்டல் நிகழ்த்துவோர் (அ) தாண்டுவோர்.

57. நீளம் தாண்டுவோர் : செல்வியர் செங்கொடி, மலர் விழி, அரசி. எனவே,

செய்தி வாசித்தல் : கண்ணன்

- என்பது சொல்தொடர் அன்று.

* செய்தி வாசித்தல் கண்ணன்.
* செய்தி வாசிப்பது கண்ணன்.

என வரக் கூடாது. 56, 57 சொல்லியங்கள் போல்

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்.

என வினையாலணையும் பெயராக்கி சொல்தொடர் அமைக்க வேண்டும்.

9. தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும்

தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடு உண்டு.

Scanned with CamScanner

மாற்றுத் தொழிற் பெயர்கள் (ஓடுவது, ஓட்டம், வந்தது வந்தமை, பாடல். வாசிப்பு, யாப்பு போன்றவை) தொழிற் பெயரின் இடத்தைப் பிடித்தால் தொழிற்பெயரின் சில பண்புகள் (காலங்காட்டாதது முதலியன) குறைந்து, வேறுபடுத்துவதில் இடர்ப்பாடு வந்தது. மாற்றிலக்கண அடிப்படையில் நாம் காணும் சில வரையறைகள் :

நெறி. 3 அ) செயலுக்குப் பெயராக வருவது தொழிற்பெயர்
ஆ) கருத்தாவுக்குப் பெயராக வருவது வி அ.பெ

59. கண்ணன் வாசிப்பது செய்தி
வாசி + அது
} செயலுக்குப் பெயராக வந்ததால் தொழிற் பெயர்

60. செய்தி வாசிப்பது கிளி
வாசி + அது
} கருத்தாவுக்குப் பெயராக வந்ததால் வி.அ.பெ.

நெறி 4. அ) தொழிற்பெயருக்கு முன்னால்தான் (காலமுன்) கருத்தா வரும்.
ஆ) வினையாலணையும் பெயரின் ஈற்றில் அவ் வினையின் கருத்தாவைக் குறிக்கும் மாற்றுப் பெயர் வரும்.

59. கண்ணன் வாசிப்பது செய்தி
வாசி + அது
} முன்னால் கருத்தா வந்ததால் தொழிற் பெயர்

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்
வாசி + அவன்
} கருத்தா குறிக்கும் மாற்றுப் பெயர் உடைமையால் வி.அ.பெ.

நெறி 5. (அ) தொழிற் பெயர் அடுத்து (இடமுன்) வினைமுற்று வராவிட்டால், செயப்படு பொருள் பெயர்ப் பயனிலையாக வரும்.

39. ஓடியதைப் பார்த்தேன் - தெரிநிலை வினைமுற்று.

21. ஓடுவது நல்லது - குறிப்பு வினை முற்று.

Scanned with CamScanner

45. ஒருவன் திண்ணையை மெழுகினான்

செயப்படுபொருள்.

61. ஒருவன் மெழுகியது திண்ணை

பெயர்ப்பயனிலை.

59. கண்ணன் வாசிப்பது செய்தி.

62. தச்சன் செய்வது பெட்டி.

நெறி 5 (ஆ) வினையாலணையும் பெயரை அடுத்து (இடமுன்) வினைமுற்று வரா விட்டால், எழுவாய் (கருத்தா) பெயர்ப்பயனிலையாக வரும்.

38. ஓடியதைப் பிடித்தேன் - தெரி நிலைவி.மு.

62. ஓடியவன் நல்லவன் - குறிப்பு வி.மு.

ஐம்பாலிலும் எழுவாய் பெயர்ப்பயனிலையாக வரும்.

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்.

64. .... ப்பவள் அழகி

65. .... ப்பவர்கள் கண்ணனும் அழகியும்.

60. .... ப்பது கிளி.

60. .... ப்பவை கிளியும் பூவையும்.

எனவே 'வாசிப்பது' தொழிற்பெயராக வரும்பொழுது செயப்படு பொருள்தான் பெயர்ப் பயனிலையாக வரும்.

நெறி 5 (இ) செயப்படு பொருள், தொழிற்பெயரை அடுத்து (இடமுன்) பெயர்ப் பயனிலையாகும் போது உயர்திணைப் பெயர் வேற்றுமை உருபுடன் தான் வரும்.

67. நான் உன்னைப் பார்த்தேன்.

செயப்படுபொருள்.

68. நான் பார்த்தது உன்னை!

பெயர்ப்பயனிலை.

* நான் பார்த்தது நீ!

69. அவன் அவளோடு வந்தான்.

70. அவன் வந்தது அவளோடு!

* அவன் வந்தது அவள்.

'வாசிப்பது' என்பது வினையாலணையும் பெயராக வரும் பொழுது பெயர்ப் பயனிலையாக எழுவாயில் வரும் அஃறிணை தான் வரும்.

Scanned with CamScanner

60. செய்தி வாசிப்பது கிளி.
இங்கே உயர்திணை வரக்கூடாது.
* செய்தி வாசிப்பது கண்ணன்.
* அவனோடு வந்தது இவன். (காண்க-வா 70.)

10. அழுத்தம் (Stress) தருவதா?
71. நான் அடித்தது மணிப்புறுக்களை!
72. அவன் பாடியது பாட்டு!
73. திருவள்ளுவர் இயற்றியது திருக்குறள்!

நான் அடித்தது மணிப்புறுக்களைத்தாம், குருவிகளை அல்ல! அவன்பாடியதுதான் பாட்டு, மற்றவர் பாடியது வெற்று வேட்டு! என்றெல்லாம் அழுத்தம் தருவதற்கு மேற்கண்ட சொல்லிய அமைப்பு பயன்படுகிறது.

அடித்தது, பார்த்தது, பாடியது போல, 'வாசிப்பது' வரலாமா?
71. நான் அடித்தது மணிப்புறுக்களை!
= கண்ணன் வாசிப்பது செய்திகளை!
* மணிப்புறுக்களை அடித்தது நான்!
= செய்திகளை வாசிப்பது கண்ணன்.
72. திருவள்ளுவர் இயற்றியது திருக்குறள்.
* திருக்குறள் இயற்றியது திருவள்ளுவர்.

எனவே,
73. கண்ணன் வாசிப்பது செய்திகளை
என அழுத்தம் கொடுப்பதற்காக வழங்கலாம். முன்னால் சொல்வதால் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றால்,
74. செய்திகள் வாசிப்பவன் கண்ணன் (அல்லது)
செய்திகள் வாசிப்பவர் கண்ணன் எனக்கூறலாம்.

11. வாசிப்பது, வாசிப்பவை
75. சீதை கண்டது ஊர். 76. சீதை கண்டது ஊர்கள்.
77. சீதை கண்டன ஊர்கள்.

கண்டது என்ற தொழிற்பெயர் கண்டன எனப் பன்மை ஏற்று வருவது மாற்றுத் தொழிற்பெயர்களால் நேர்ந்த விளைவு.

பாட்டு — பாட்டுகள், பாடல் — பாடல்கள்
பாடியது — பாடியன, தாண்டல் — தாண்டல்கள்
வழுவல் — வழுவல்கள்.

என வரலாயின. எனவே,
59. கண்ணன் வாசிப்பது செய்தி.
78. கண்ணன் வாசிப்பது செய்திகள்.
79. கண்ணன் வாசிப்பவை செய்திகள்.

என வரலாம். செய்தி அல்லது செய்திகள் என்பதை முன் வைத்தால்,

Scanned with CamScanner

58. செய்தி வாசிப்பவ - [ன்] - [ர்] கண்ணன்.
74. செய்திகள். ,, ,, ,,
என வரும்.

12. புதைநிலைச் சொல்லிய வடிவம்.

* செய்திகள் வாசிப்பது சேகரன் என்ற சொல்தொடரின் புதைநிலைத்தொடர்.

* செய்திகள் வாசிப்பது சேகரன் ஆவார் என்பது தவறானது.

* செய்திகள் வாசிப்பது சேகரன் ஆவார்.
* வாசிப்பது சேகரன் ஆவார்.
* அது சேகரன் ஆவார்.

அது ஆவார் என்பதும், அது சேகரன் என்பதும் பொருந்தா. அவர் ஆவார், அவர் சேகரன் என்பனவே பொருந்தும்.

அவர் சேகரன்.
அவர் சேகரன் ஆவார்.
வாசிப்பவர் சேகரன் ஆவார்.
செய்திகள் வாசிப்பவர் சேகரன் ஆவார்.

80. 'செய்திகள் வாசிப்பவர் சேகரன்' என்ற சொல்லியம் அமைகிறது.

81. மரம் அறுப்பது வாள் - ஆகும்.
60. செய்தி வாசிப்பது கிளி - ஆகும்.
78. கண்ணன் வாசிப்பது செய்திகள்-ஆகும்.
82. மரம் அறுப்பவன் முத்தையன் - ஆவான்
80. செய்திகள் வாசிப்பவர் சேகரன் - ஆவார்.

எனவே 'ஆகும்' என்பது அஃறிணை ஈற்றுக்கும் (அது, அவை) ஆவான், ஆவார் முதலியன உயர்திணை ஈற்றுக்கும் (அவன், அவர் முதலியன) புதைநிலைச் சொல்லிய முடிவாகும்.

13. எனவே:

1. 'கண்ணன் வாசிப்பது செய்திகள்' 'என்பதில்' 'வாசிப்பது' என்பது தொழிற் பெயர்; செய்திகள் என்ற அஃறிணைப் பெயர்ப் பயனிலை பெற்றுள்ளதால் சொல்லியம் சரியானது.

2. 'செய்திகள் வாசிப்பது கண்ணன்' என்பதில் 'வாசிப்பது' என்பது வினையாலணையும் பெயர்; எனவே அஃறிணைப் பெயர்ப் பயனிலை வரவேண்டும். உயர்திணை வந்துள்ளதால் தொடர் சொல் தவறானது.

3. உயர்திணைக்குரிய வினையாலணையும் பெயரிட்டால் 'செய்திகள் வாசிப்பவர் கண்ணன்' எனவரும். சொல்தொடர் சரியானது.

— நன்றி 'மொழியியல்' — 6-1-(19-2)

மீண்டும் மறு ஆய்வு செய்து நல்ல முடிவெடுங்கள்!

42. 'தென்மொழி', தமிழ்நிலம் உள்ளவரை சிறக்க வேண்டும்!

பரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு,

தாங்கள் நடத்தி வருகிற 'தென்மொழிப் பாசறை மூடப்படும்; தமிழ்ச்சிட்டும் கூட்டில் அடைக்கப்பெறும்' என்ற அடிகள் எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. மாறாக நெஞ்சத் துடிப்பை நிறுத்தும் சொற்றொடராகவே இருந்தது. 'வெள்ளி விழாவினை விழைந்தே எடுக்கையில் கொள்ளி வைப்பது குணமோ?, என இதழில் அன்பரொருவர் உரைத்திருந்ததே என் நெஞ்சிலிருந்தும் எழுந்தது.

இழிவான இதழ்கள் தமிழகத்தில் நெடுக்கப் படுத்து அரசோச்சும் நிலையில் நம்மிதழ்களும் இல்லையெனில் தட்டிக்கேட்கத்தக்க இதழ்கள் இல்லையென அவர்கள் முகத்திரையைக் கிழித்துக் கொண்டு தங்களின் இழிவான இதழ்த்தனத்தை அள்ளி வீசுவர். 'நிலம்', செழிக்க எடுத்த முடிவு சரியானதெனினும் 'மொழி'யின்றி அஃது எப்படித் தலைவ! செழிக்கும்? உண்மை நெஞ்சங்களின் வேண்டுகோள்களின் அணியில் எனது குரலையும் சேர்த்துக் கொள்க! ஆம் 'தென்மொழி' — தமிழகம் — தமிழ்நிலம் உள்ளவரை திகழ்ந்து சிறக்கும்! சிறக்க வேண்டும்! சிறக்கச் செய்வோம்! இஃது என்னின் பணிவான வேண்டுகோள்.

— **மணிமிடற்றன்**, பாண்டி.

43. மெல்ல மெல்லத்தான் உருவாகுவார்கள்! 'தென்மொழி' தொடர வேண்டும்!

பேரன்புமிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

தங்கள் ஆனந்தன் வரைவது; வணக்கம்.

தங்கள் தென்மொழி ஆசிரிய உரை கண்டு துணுக்குற்றேன். தென்மொழி தொடர்ந்து வாராமல் நிறுத்தப்பட்டு விடுவதற்குரிய பல கரணியங்களைத் தாங்கள் தந்திருக்கிறீர்கள். அவை தங்களின் உள்ளத்தில் எவ்வளவு பெரிய புண்ணை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் காட்டுகின்றன. எனினும் மறுஆய்வு தேவை என்பதே என் தாழ்மையான கருத்து.

முடிவு எடுத்த பின்னர் மடல் எழுதுவதில் பயனில்லை என நான் வாளாவிருந்தேன். ஆனால் ஆற்றாமையை என்னால் வெளியிடாமல் இருக்க முடியவில்லை. எனவே எழுதினேன். தென்மொழியால் உணர்ந்தவர்கள் பலர். அவர்கள் தந்நலத்திற்காகத்

தென்மொழியைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஏறத்தாழ 10,000க்கு ஒருவர்தாம் தென்மொழி வாங்குகிறார். அவர் தனித்தமிழ்க் காவலராகி விடுகிறார். பொது மக்களுக்குப் பயன்படும் அளவில், எதிர் நீச்சல் போடுகிறார் - அந்த நிலையினைத் தென்மொழி உருவாக்குகிறது. அதுவே தென்மொழியின் பயன், குறிக்கோள் எல்லாம். ஏனெனில் தென்மொழி என்பது ஓரியக்கம்; ஏடு அன்று. இயக்கத்தில் பொது மக்கள் இணைய வேண்டிய காலகட்டத்தைத் 'தென்மொழி' மெல்ல மெல்லத்தான் தோற்றுவிக்க முடியும். அதுவரை, தனித் தமிழ்க் காவலர்களைத்தாம் இஃது உருவாக்கிட இயலும். அமைப்பு நிலையில் வளர்ந்த கட்சிகளைகூட 'பொதுமக்களை' [மந்தைகளை] முழுதும் கவர்ந்திட வில்லை. அதற்குக் காரணங்கள் பல. மிக அடிப்படைக் காரணம் கல்வியின்மை; அறியாமை. இதில் இன உணர்வு கொள்ள வகை செய்யும் தொடக்க காலப் போர் வீரர் களை மட்டுந்தாம் உருவாக்க இயலும். படையில் உயிரைப் பணயம் வைத்துச் செல்லும் முதற்படைவரிசை; போர் உணர்வே அற்ற பலரைக் காப்பது போல. இவை தாங்கள் அறியாதன வல்ல. மற்ற காரணங்கள் இருப்பின் அவை பற்றி எனக்குத் தெரியாது. 'தென்மொழி' என்கிற குறிக்கோளுக்கு நடைமுறைச் செயலாக்கத்தைத் தரும் அமைப்பு இதழ் 'தமிழ்நிலம்'. அதுகூட 'பொதுமக்களைத்' தொட பல்லாண்டுகள் ஆகலாம். உ.த.மு. கழகம் செயற்படை. அதனை அறிய, பொதுமக்களுக்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். இது 'தமிழ்நாடு'. தாழ்வுற்று வாழத் துடிக்கும் நம்நாட்டு மந்தைகளை மேய்ப்போர் மட்டும் போதாது- மக்களை வழிநடத்தும் மாவீரர்கள் வேண்டும். அவர்கள் மெல்ல மெல்லத்தான் உருவாகுவார்கள். தென்மொழி அதனைச் செய்து வருகிறது. வட்டிக்கணக்குப் பார்ப்பதில் பயனில்லை. தென்மொழி தொடரவேண்டும் அறிவுக் கூர்வாள்களை அணியமாக்கும்!

தங்கள் அன்பு — கு.ச. ஆனந்தன், கோபி

44. தனித்தமிழுக்கென ஓர் ஏடு தேவை!

'என்றுமுள தென்றமிழின் ஏற்றத்திற்கு இடையறாது உழைத்து வரும் எமதரும் பெரியீர்! வணக்கம்!

கடந்த இதழ் தென்மொழி ஆசிரியவுரை கண்ணீரை வர வழைத்துத், தனித்தமிழ் உணர்வு கொண்டோரை இணைக்கும் பால மாகவும், அவர்க்கெல்லாம் உள்ளத்தில் உறுதியினையும், உணர்வில் எழுச்சியினையும், செயலிலே ஊக்கத்தினையும் தந்தும், தனித்தமிழ்ப் பகைவர்கள் எள்ளலையும், துள்ளலையும், பகடியையும், ஏகடியத்தை யும் பொருட்படுத்தாது, அவர்தம் பகையை முறியடிக்கும் போர் வாளாக, எதிரீட்டியாக விளங்கிடவும் வரும், தாய்த்தமிழுக்கு அணியாம் 'தென்மொழி' இதழ் படிப்படியாய் நின்று விடும் என்ற கொடுஞ் செய்தியினைப் படித்ததால் விளைந்த விளைவேயது! தங்கள் முடிவினைக் குறித்து மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

ஏழு உயரிய கொள்கைகளைக்கொண்ட உ.த மு.க.வின் கொள்கை ஏடாம் 'தமிழ்நில'த்திலே தாங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தப் போவதாய் எழுதியுள்ளீர்கள். வரவேற்க வேண்டியதே! ஆயின் தனித் தமிழுக்கென ஓர் ஏடு இருத்தல் இன்றியமையாத தேவை என யாம் எண்ணுகிறோம்.

பல வேலைகளை ஒருசேரச் செய்யும்போது, "தனித்தமிழ் என்ற ஒருகருத்திலே, சற்றும் தொய்வு விழுந்துவிடக் கூடாது என்ற பேரவாவின் அடிப்படையிலே எழுந்ததுதான் அவ்வெண்ணம்.

'மொழியென்றால் உடம்பின் நரம்பு — நம்
முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு;

என்று பாவேந்தர் கூறிய பைந்தமிழின் தனித் தன்மையைக் காத்திட, கடந்த கால் நூற்றாண்டுகளாயத் தூய தொண்டாற்றி வரும் எமதரும் தென்மொழி தனது தொண்டினைத் தொடரவேண்டும். தென்மொழி நின்றுவிடின் தனித்தமிழ்ப் பகைவர் மொழிச்சிதைவுப் பணியிலே மேலும் முனைப்போடு ஈடுபடுவர். எக்காளமிடுவர். எதிர்த்திட ஆளின்றிப் போய்விடுவர். யாமோ, தோன்றாத் துணை யினை அரும் பெறல் பெட்டகத்தை இழந்தவராவோம். அருள் கனிந்து தங்கள் முடிவினை மாற்றுமாறு வேண்டுகிறோம். வெல்க தனித்தமிழே! தொடர்கவே 'தென்மொழி'யின் தொண்டு' இவண்,

— **வே. அரங்கசாமி,** பொறி.இ., காங்கேயன்.

45. ஆயிரமாயிரம் அன்பர்கள் உறுதுணை உறுதி!

அன்பார்ந்த ஐயா, தென்மொழி இதழ் கண்டேன்; ஆசிரிய வுரை படித்துத் திடுக்கிட்டேன். கடுங்கதிர்ச் செல்வன் காயும் பொழுதில் ஓர் இடியெனைத் தாக்கியது! நொடிப்பொழுதில் நெஞ்சைக் கலக்கி, இன்பத்தினை விலக்கித் துன்பக் கடலில் வீழ்த்தி யது; 'தென்மொழி இதழ் படிப்படியாக நின்றுவிடும். அதன் கற்பிப்புப் பள்ளி மூடப்பட்டுவிடும்' என்ற வரிகள்தாம் அந்த இடி!

என் போன்றோர்க்கு அவ்விடி ஒன்று போதாது என ஓர் அடியும் தலையில் விழுந்தது! அதுதான் இது :- 'தமிழ்ச்சிட்டும் பறப்பதை நிறுத்திவிடும்'. அஃது உங்களின் உள்ளெழுச்சி எனில், 'என்னுயிரும் உயிர்ப்பதை நிறுத்திவிடும்' இஃது என் உள்ளெழுச்சி யாகும்! உங்களின் மாற்றம் எங்களுக்குப் பெரும் ஏமாற்றம்; தங்களுக்கு ஏன் வந்தது இந்த உடனடி மாற்றம்! தென்மொழி, தமிழ்ச்சிட்டுகளை நிறுத்தித் 'தமிழ்நிலம்' வளர்ப்பதா? ஐயகோ, தமிழ்ச்சிட்டின் சிறகையொடித்து அதனை உரமாக்கித்தான 'தமிழ் நிலம்' உழுது பயிர் விளைவிக்க வேண்டுமோ?

தமிழ்ச்சிட்டு, பள்ளியிலே படிக்கும் கள்ளமில்லாச் சிறுவர்களை அறிவுப்பாதையில் அழைத்துச் செல்வதைத் தாங்கள் அறிவீர்கள்!

Scanned with CamScanner

அந்தத் துள்ளி விளையாடும் பள்ளிச் சிறுார்கள் என்ன தீவினை செய்தார்கள்? அவர்களுள் எத்தனைப்பேர் ஏழை மாணவர்கள்? தமிழ்ப் பற்றுல் உந்தப்பட்டுத் தாமே தமிழ்ச்சிட்டை ஏற்போர் பலர்! வறுமைத் தீயின் கொடுமையைத் தணிக்கும் மருந்தாகத் தமிழ்ச் சிட்டு அவர்களுக்கு இலங்குவதாக அறிந்தவன் நான்! அகம் மலர்ந்து அவ்வேழை மாணவர்கள் அதனுல் முகமும் மலர்ந்து தமிழ்ச்சிட்டைப் படிக்கும் காட்சி கண்டு உளம் பூரித்தவன் நான் இதனைத் தாங்கள் அறிய முடியாமற் போய்விடுமோ? தமிழ்ச்சிட்டின் கழுத்தினை எட்டிப்பிடித்து அதன் உயிர் பறிக்குமாற்றுன் அறுத தொழிக்க முயன்றவர் எத்தனைப்பேர்? அத்தனைப்பேர்க்கும், தமிழ்ச் சிட்டின் உயிர்பறித்து அதன் உடலத்தால் அறுசுவை உண்டி சமைத்துப் படைக்கத் தங்கள் மனம் எப்படி ஐயா இசைந்தது?

தனித்தமிழென்னும் வழிகண்டு கழியுவகை காணும் மாணவர்கள். இனிக் கலப்புத்தமிழைப் பேசித் தமிழைக் குழப்புவதற்குத்தான் தாங்கள் வழிவகுக்கப் போகின்றீரா?

'என்மொழி என்னினம் என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன்!' என்றீர்களே!

தென்மொழி நின்றுல் உம் மொழி நலியாதோ? யாரோ ஓரிருவர் செய்த, செய்கின்ற இரண்டகத்தைப் பெரிதென எண்ணி விட்டீர்களே! எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் என்ற ஐயாவே, இதனை ஏன் பெரிதென எண்ணினீர்? எதையும் தாங்கும் திண்ணெஞ்சம் திசைமாறிப் பார்ப்பதேன்?

தென்மொழி அன்பர்களுள் பலர் அறிவாளித்தனங்களாகிப் புகழ் பெற்றுல் நமக்கென்ன இழப்பு! அவர்களுடன் நம்மவர் உடன் படிக்கை ஏதும் செய்துகொண்டு இப்படித்தான் உழைக்கவேண்டும் என்று ஏதாவது கட்டுப்பாடு அமைத்துப் பிறகுதான் தென்மொழி அன்பர்களாக ஏற்றுக்கொண்டோமா? இல்லையே! அவரவர்களாகத் தென்மொழி அன்பர்களானுர்கள், தங்கள் தங்கள் உடல் நலன், சுற்றுப்புறச் சூழல், உறவினர்திறன் அறிவுத்திறன், உள்ளார்வம் இவற்றிற்கேற்பப் பொதுத்தொண்டு, தமிழ்த்தொண்டில் தங்களை இணைத்துக் கொண்டனர்! முடியாதவர்கள் தம்மறிவையேனும் வளப்படுத்திக் கொண்டு தனித்தமிழ் அன்பராகவாவது இருக்கின்றுர்களே! அதுவே நமக்கு மகிழ்ச்சிதானே! முட்டாள்களாக இல்லாமல் அவ்வன்பர்கள் (தனித்தமிழன்பர்கள்) அறிவாளித் தனங்களாகத்தானே இருக்கிறுர்கள்! இதிலென்ன நமக்கு எரிச்சல்! அறிவு வழிச் சுரண்டல்காரர்கள் அவர்கள் என்றுல் அவர்களுக்கு எவ்வாறு புகழ்கிட்டும்? காலமல்லவா அவர்களுக்கு விடை கூற வேண்டும்! நமக்கேன் அந்தப் பொறுப்பு?

நாட்டிலுள்ள அனைவரும் அல்லது பெரும்பான்மையோர் தனித் தமிழன்பர்களாக வேண்டுமென்பதுதானே நம் விருப்பம். அவர் களுள் பொதுநல எண்ணமுடையோர்தாமே உயர்வர்' தந்நல எண்ணமுடையோர்தாமே தாழ்வர்! பொருள்நிலையில் அவரவர் சூழல், திறன், சுற்றம் நல்வினை தீவினைக்கேற்ப ஏழைகளாகவோ செல்வர்களாகவோ இருப்பர்! அதை யாரால் மாற்ற முடியும்? அதைப்பற்றிய கவலை நமக்கேன்? யார்தாம் இந்நாட்டிலுள்ள அனைவரையும் செல்வர்களாக மாற்ற முடியும்?

அப்படியே, செல்வர்களாக ஆனபின்பு அவர்களுக்கெங்கே மொழியுணர்வு இருக்கப்போகிறது? ஏழைகளாக உள்ளவர் உணவுக் காகப் போராடுகின்றனர். செல்வர்களாக உள்ளவர் இன்பத்திற்குப் போராடுகின்றனர். உணவும், இன்பமும் கிடைத்ததும் ஏழையும் செல்வரும் தம்மை மறக்கின்றனர்! அறிவை வளர்க்கும் எண்ணம் எப்படி வருப? எனவே ஏழையாகினும், செல்வராகினும் இன வுணர்வு, மொழியுணர்வு இயல்பாக உடையவரே, தமிழின் சிறப் புணர்ந்து அதனால் ஈர்க்கப்பட்டவரே நம் அணிக்கு வருகின்றனர். அவரவர் தத்தம் நிலையைச் சரிசெய்து கொள்வா! எனவே குமுகாய நோக்கில் பாடுபட உ.த.மு.க. இயக்கம் இருக்கிறது! மொழிநோக்கில் பாடுபட 'தென்மொழி' நமக்கு என்றும் தேவை யானதொன்றும்!

வள்ளுவப் பெருந்தகை காலத்திலும் உள்ளதுதானே ஏற்றத் தாழ்வு? எக்காலத்திலும் இருப்பதுதானே அது! எனவே ஏழையைச் செல்வராகவும், செல்வர்களை பொதுநலக்காரர்களாகவும் ஆக்க வேண்டும் என முயன்றால் தமிழ்மொழி—தனித்தமிழ் மொழியாக ஆவது என்று? அதற்காக முயல்பவர் யார்? - நாமும் வழிமாறினால் இருக்கின்ற தமிழ்ப்பற்றுளர்களும் நலிவர்! நாட்டில் மொழிப்பற்றே இருக்காது!

தொடக்கம் முதல் உங்களின் (நம்மவரின்) கொள்கை னித்த தமிழ்தானே! நாம் மொழியை ஆளவேண்டும்' தமிழால் இந்நாட்டை ஆளவேண்டும் அதுவரை துஞ்சுவதில்லை ("மொழியையும் நாட்டை யும் ஆளாமல் துஞ்சுவதில்லை") என்பதுதானே தங்களின் உயிர் மூச்சு! நம்மவரின் கொள்கைப்பேச்சு! இவ்வாறு இருக்கையில் ஏன் தென்மொழியை நிறுத்தவேண்டும்? இன்னுமொருமுறை எண்ணிப் பாருங்கள்! எம்போன்றவர்களுக்காக நினைத்துப் பாருங்கள்!

ஒருவேளை தென்மொழி நிறுத்தப்பட்டால், அதன் கற்பிப்புப் பள்ளி மூடப்பட்டால்,

1. நம் கொள்கை வெல்கை இழக்கும்.
2. தனித்தமிழ் காக்கும் இயக்கம் வலுவிழக்கும்,
3. கலப்புத் தமிழ் கைவீசி நடக்கும்!

4. தமிழ்ப்பகைவர் தலைநிமிர்ந்து நடையிடுவர்.
5. தமிழ்நாட்டில் தமிழர் யாரென வினவும் நிலை ஏற்படும்.
6. நூல்களிலே பொய்யுரை எதிர்ப்பின்றி வளரும்.
7. அருந்தமிழ்ப் பெட்டகங்களை அவரவர் விருப்பிற்கேற்ற வாறு சிதைத்து வெளியிடுவர் (எதிர்ப்பிலை யாதலால்)
8. எத்தகைய தமிழ்க் கொலையும் தடுமாற்றம் இன்றி நடைபெறும்.
9. 'கண்டனக்குரல்' கொடுக்கத் தக்கதோர் தனித்தமிழ் இலக்கிய இதழ் இல்லையென்ற ஏக்கத்தால் மெய்த் தமிழன்பர் நெய்த்தீயில் உயிரைத் தமிழ்க்காக்கி உடலைப் பொய்யாக்குவர்!
10. மறைமலையடிகள், பாவாணர் போன்றோரின் வழிமுறைத் தொண்டும் தங்களின் இருபத்தைந்தாண்டுப் பயனும் தமிழ்ப்பகையால் தீயிலிட்ட மெழுகாய்ப் போகும்!

எனவே ஐயா,

என்போன்ற எத்தனை உள்ளங்கள் உணர்வை உள்ளடக்கி வெந்துகொண்டிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஆகாத காலம்; வேகாத எண்ணம். — எப்படியோ வந்து போய் அழிந்துவிட்டதாகத் தாங்கள் 'கருதி, தென்மொழி, தமிழ்ச் சிட்டு இதழ்களை நிறுத்தும் எண்ணத்தை நிறுத்திவிட்டுப் புதுப் பொலிவுடன் முன்னினும் சிறந்த தனிக்கலையுடன், பகைவரை வீழ்த்தும் அறிவுக்கனலாய், அன்பர்களை மகிழ்வூட்டும் கருத்துப் புனலாய், தனித்தமிழ் நிகரில் முகிலாய். தமிழ்நிலப் பயிரை வாழ வைக்கும் கதிராய் — தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் விளங்க, வீறுநடையிட — பாரெங்கும் தனித்தமிழ் முழக்கி இன்றுபோல் தனித்தமிழ்ப் படையென என்றும் திகழ, அனைவரும் புகழ — தொடர்ந்து வெளிவரச் செய்யுங்கள்!

சோர்வினைக் கவல்வினை அகற்றுங்கள்!
நேர்வினை இதுவெனக் கருதுங்கள்!

எளியவன் என்போலும் ஆயிரமாயிரம் அன்பர்களின் உறு துணை உறுதியாய்த் தங்களின் தோளோடு தோளாய் நிற்குமெனக் கூறி இதனை முடிக்கின்றேன்!

வளர்க தென்மொழி! தொடர்க தமிழ்ச்சிட்டு!

தென்மொழி இதழெனும் தேன்மழை இலையேல்
தீங்குகள் நேரிடும்; தனித்தமிழ் அழிந்திடும்;
பன்மொழி தமிழுள் பல்கிப் பெருகிடும்;
பைந்தமிழ் இலக்கண இலக்கியம் சிதைந்திடும்.

"அன்பரே ஆதலால் தென்மொழி உயிராம்;
அறிவுச் சுரங்கம் ஆக்கிடும் இதழாம்;
தென்கலை வளர்ந்திட, தமிழர் தெளிந்திட
தேவை; தொடர்க! தென்மொழி இதழே!

செந்தமிழ்ச் சிட்டே மாணவர் பெட்டகம்;
சிறுகதை, பயன்மொழி அளித்திடும் அறிவகம்;
அந்தமிழ்ச் சிட்டே அறிவுக் களஞ்சியம்.
ஆக்கம் ஊக்கம் வளர்த்திடும் இலக்கியம்;

* அன்பரே ஆதலால் சிட்டும் உயிராம்
அழகிய அட்டை பற்பல ஓவியம் :
என்மனம் கவர்ந்த எழில்மிகு சிட்டும்
என்றும் தொடர்க! தேவை எமக்கே!

அன்பன், — ப. எழில்வாணன், க.மு. பள்ளபட்டி
[குறிப்பு :- *அன்பரே = அன்பார்ந்த ஐயாவே]

46. தங்கள் தொண்டின் வேரே தென்மொழிதான்!

பேரன்புமிக்க பாவலரேறே! தமிழின் காவலரேறே! வணக்கம். தென்மொழி சுவடி 19 ஓலை 5 தமிழ் நெஞ்சங்களுக்கு ஆசிரியவுரை மூலம் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

தென்மொழி இதழை நிறுத்துவதென்பது நந்தமிழ் இனத்துக்குப் பெரும் போகூழ். தங்கள் தொண்டின் வேரே தென்மொழி தான். தென்மொழியை நிறுத்தாதீர்கள். தமிழ்ச்சிட்டும் பறக்கட்டும்; சிறகை ஒடித்துவிடாதீர்கள். பல்லாண்டுகள் வல்லடிமையில் சிக்கியுள்ள இனம் தளையை உடைத்து வெளிவரக் கொஞ்ச காலம் ஆகலாம்.

வஞ்சம்—அதில் தோய்ந்த நெஞ்சம் இது நந்தமிழ் மக்கள் சொத்து; பொய்ம்மை, போலிமை இவர்கள் உணர்வுக் கொத்து; ஈகம், வேகம், நெறி, குறி, மெய்ம்மை, தூய்மை இடவேண்டிய வித்து. சொல்லித் திருத்தவியலாது. கல்லி, உருக்கி, அறிவு கொளுத்த வேண்டும். நம் கொள்கைகள் வேரூன்றும் நேரம் பார்த்து வெந்நீர் ஊற்றலாமா?

நம் இதழ்களின் ஆற்றொழுக்கு நடையையோ, கொடும்புணர் நடையையோ நன்கு கற்றவர்களே புரிந்துகொள்ள முடியாத போது நாலாந்தர ஐந்தாந்தர மக்கள் எங்ஙனம் புரிந்துகொள்வர்? தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகியவை வேரூன்றும் நேரம். அவற்றை நிறுத்த வேண்டாம். — எழினன்,

புதுக்கோட்டை.

47. தேவையற்றவர்களை ஒதுக்கித் தள்ளுங்கள்!

அருட்பாவலரேறு அவர்களே, வணக்கம், நலம்; நலமே உறுக! 'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்களை உண்டாக்கப்போகி றேன்' என்ற உங்கள் தென்மொழி தலையுறுப்பாசிரியத்தை வரவேற்கிறேன். கால்நூற்றாண்டுக்குப்பின் இந்த ஐம்பது அகவை யில் உங்களிடம் 'பிறப்பிறப்புக்கொள்கை' ஏற்பட்டுள்ளது; இறை மையுணர்வில் மெய்யுணர்வின், முதிர்ச்சியை உங்களிடம் காண் கிறேன்.

எடுத்த எடுப்பில் 'தென்மொழியையும், தமிழ்ச்சிட்டையும்' இழந்துவிட வேண்டாம்! அவற்றால் வளர்ந்து 'வாழ்ந்தவர்கள்' இனியும் அவற்றை வளர்க்கும் எண்ணத்தில் அவர்கள் வயிறு வளர்க்கவேண்டாம். ஆனால் இவற்றால் தாங்கள் மேலும் அவர்களை வளரவிடவேண்டாம். ஆனாலும் இவ்விதழ் இரண்டும் தங்கள் கண்காணிப்பில் பிறர்பொறுப்பில் விட்டுவிடுங்கள். ஏடுகளை நிறுத்து தல் கூடாது. அவற்றின் கொள்கையைப்பூண்டு வழக்கம்போல். வெளிவரட்டும். நிலுவைப் பணத்தைத் தின்று ஏப்பமிட்ட பெருச் சாளிகள் இனித் திருந்துவார்களா எனப் பொறுத்திருந்து பார்ப் போம்! நிலுவை வராதவர்களுக்கு இனியும் அனுப்புதல் வேண்டா.

உங்கள் கொடுஞ்சுமையை — கடுந்துயரை நானும் பொறுப் பாக உளம் நெகிழ்ந்து ஏற்கிறேன். உங்கள் மெய்யுணர்வு வாழ்க. தென்மொழிக் கொள்கையின்படி 'பல்வேறு' ஆய்வாளர்களின் படைப்பாக அது தொடரட்டும். அது மக்கள் ஏடாக' மலரவே முடியாது என்பதாகக் கவலுறுவதில் பொருளில்லை. ஆனால் அது பல்கலைக் கழகப் பனுவலாகவே என்றென்றும் வரட்டும்-வளரட்டும்; ஆனால் உ.த.மு க. வின் கொள்கை ஏடாகவே, தனித்தன்மையுடன் 'தமிழ்நிலம்' அப்பேரியக்க ஏடாகவே, எவரும் பெயர்கள் இன்றி (அதில் எழுதும் எழுத்தாளர்கள் என்ற படைப்பாளர்களின் பெயர் களில் எவரையும் குறிப்பிடவேண்டாம். சிறப்பாசிரியர் பெயர் மட்டும் போதும். புனைபெயர்களில் பலர் எழுதட்டும்.) இவ்வேடு கிழமைதோறும் மக்கள் படிக்கும் ஏடாகவே திகழ்தல் நலம், இதனால் மக்களைப் பற்றிய செய்தி — திறனாய்வு — அரசியல் முதலிய பிற இயல்களில் சில குறிப்பிட்டவர் எழுதினாலே போதும். ஆய்வுக் கட்டுரைகள் வேண்டியதில்லை. உணர்ச்சிப் படைப்புகளை அரசியல் ஊட்டமாகவே எழுதுவோம். மக்கள் தமிழ்நிலத்தில் எங்கெங்கே எப்படி எப்படி எவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டு, புறக் கணிக்கப்படுகிறார்கள் என்பதை விரிவாகப் பேசுங்கள் பேசுவதைத் துணிவாக எழுதுங்கள்: எழுதத் தூண்டுங்கள். கழகத்தின் ஏழு கொள்கை உணர்வுகளையே வளர்ப்போம்.

நன்றி கொன்ற படிப்பாளிகளை-கோழைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளுங்கள். ஒத்துக்கு மத்தளம் போடும் பேடிகளையும் முண்டாங்

களையும் அவர்களின் பட்டப்படிப்பறிவோடு அழியட்டும். நமக்குக் களத்தில் பறக்கத் தொண்டாற்றும் வீரக்கட்டிளங்காளைகளான இளம் பையன்களே போதும். 18—23 அகவையுள்ள குறைந்த படிப்புள்ள செயல் வீரர்களே வேண்டும். இவர்களே அணியணியாகத் திரட்டும் புரட்சி மல்லர்களே வேண்டும்; இவர்களே மக்களை வழி நடத்தும் செயல் வல்லுநர்களாகத் திரண்டெழுந்து வந்து எழுஞாயிறுகளாகத் தொண்டாற்றுவார்கள். ஊருக்கு நூறுபேர் இப்படி ஓடிவரட்டும்' பேராசிரியர்களும் புலவர்களும் ,சோம்பேறிப்பாவலர்களும் நம்மிடையே தோன்றித் தோன்றிப் பயனில்லை. ஓடியாடி உழைத்துச் செயல் திறன் மிக்க நறுங்காளைகள் நம்மிடையே உருவாகவே 'தமிழ்நிலம்' பாடாற்ற வேண்டும். தமிழ்நிலம் மாவட்டப் புரப்புநர் — திறமையாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் படித்த மூடர்களை உருவாக்கிய ஊழ்வினையிலிருந்து நாம் விடுபடுவோம். இத்தகைய சோற்றுப் பிண்டங்களையும், பட்டம் பெற்ற முட்டாள்களையும் விட்டொதுக்குவோம். செயலுணர்வு அற்ற படுகோழைகளில் பலர் பட்டம்பெற்ற இலக்கியப் பண்டாரகர்கள் ஆவர். இவர்களில் பலரையும் நான் ஆழம்பார்த்து விட்டேன். அரைக்காசு கூட ஈகமற்ற இவர்களால், நாம் கழகத்தை வளர்க்கவும் முடியாது. இவர்களிடம் ஈகமுமில்லை, அறிவொழுக்கமுமில்லை. ஒரே கொள்கையைப் பரப்ப ஒன்பது ஏடுகள் வேண்டியதில்லை;தொண்ணூறுபேராசிரியர்களும் வேண்டாம். அவரவர்க்கு ஒரு கட்சியும், ஆள் ஆளுக்குத் தனிக் கொள்கையும், அதற்கேற்ற தன்னலத் தன்னாட்சிப்' புலனறிவும் வேண்டவே வேண்டாம். இவர்களின் நட்புறவு தவளையும் எலியும்' போன்றுதான். அண்மையில் வந்தாலும் அண்டவிடாதீர்கள். தனிமானம்—தனிக்கொள்கை – தனிமேடை-தனித்தன்மை எல்லாவற்றையும் இழந்துவிட்டுப் பொதுப்பான்மையுடன் நம்முடன் அணியமாக வருவோரைச் சேர்ப்போம் அவர்களை ஈர்ப்போம். தமிழ்நிலத் தொண்டர்களாகத் தெருவுக்கு அறுவராக வரட்டும். இவர்களுக்குப் பயிற்சியும் பட்டறிவும் தருவோம்! எனவே எண்ணிச் சீர் தூக்கி முடிவு எடுங்கள். நன்றி இவ்வண்,

— **இரா. ந. வீரப்பன்**, மலேசியா.

48. என் குடும்பத்தைத் துணையாக்குவேன்!

தென்மொழியை, கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச் சாகும்வரை தேர்ந்த உயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன்! - வாழ்வு தீர்ந்துவிடில் வேற்றுடலம் மாற்றிவருவேன்!"

அருள் மிகுந்த வணக்கத்திற்குரிய ஐயா' அவர்களுக்கு வணக்கம்; தமிழ்மண்ணைப் பிரிந்தாலும் எளிய வாழ்வை மறவாமல் வாழ்ந்து வருகிறேன். தென்மொழி இறுதி இதழை அண்மையில் கண்டேன்; எதனையும் எண்ணிச் செய்யும் தாங்கள் இம்முடிவுக்கு

வரக்காரணம் விடுதலையை விரைவில் பெற நேரடியாகக் களத்தில் இறங்க வேண்டும் என்ற முன்கணிப்பாக இருக்கலாம் என்று எண்ணுகின்றேன். மக்கள் கூட்டம் என்னும் எந்திரப் பொறி இவ்வரிய ஈகத்தை அன்று ஒருபொழுது பாராட்டி, மறுநொடியே தன் பழம்போக்கில் செல்லும் வழக்கம் உடையது. வள்ளலாரின் ஈவு - இரக்கமிக்க அருள் உள்ளத்தை 'தெய்வமாக்கிப்' பார்க்கின்ற பழக்கமுடைய தமிழர் அவரின் சீர்திருத்தக் கருத்துகளில் கவனம் செலுத்துவது அரிதினும் அரிது ஒவ்வொரு மாந்தனிடமும் கட்சி, திரைக் கவர்ச்சி, குடும்பப்பற்று, தன்னலப் போக்கு, ஏதோ ஒன்றை அடையத் துடிக்கும் கற்பனை ஏக்கம் ஆகியவை இல்லாமல் இக் காலத்தில் வேறு காணமுடியாது என்பதனை நாம் அறிவோம்.

தென்மொழிக் குழந்தையைக் 'காவு' கொடுத்துப் பொதுஎளிய ஏழை மக்கள் என்னும் கடல் நடுவில் புக இதுவே தக்க நேரம் என்று தாங்கள் கணித்திருந்தால் அது தவறன்று! இந்தியத் துணைக்கண்டத்துள் (இந்தியா, பாக்கித்தானம், வங்கநாடு, பருமா, ஈழம் ஆகியவை உள்ளடங்கிய) இன்று குமுறி வெடித்து வரும் மாநிலப் பிரிவினை எண்ணங்கள் தமிழகத்தில் தக்காரால் துணிந்து பரப்பப்பட்டாலன்றி, நாம் தாழவும் மற்றவர்களுக்குப் பிந்தியவராக நம்மை ஆக்கி விடவும் கூடும். அரசியலை நம்பிப் பதவியைப் பெற்றோரால் தன்னாட்சிக்குரலை நலிந்த அளவில்கூட சட்ட மன்றத்தில் முழக்க முடியாதபடி அமைந்து விட்டதைப் பார்த்தோம்; வாயிருப்பைத் தவிர கைபிருப்பில்லாதவர்களால் தமிழ் மண்ணுக்கு விடுதலை பெற்றுத் தரமுடியவே முடியாது என்பது காலங் கடந்தாவது விடுதலை விரும்பிகளுக்குத் தெரிந்துள்ளது. இதனை நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் நல்லது. நம் தமிழ் மரபுக் கேற்ப பொதுவுடைமைக் கொள்கையை உருவாக்க - இன்றுள்ள தமிழக - தமிழீழப் பொதுவுடைமையாளர் பெரும் முட்டுக் கட்டைகளாகவே இருப்பர். இன்று உருசியா போலந்திலும் ஆபுகானித்தானத்திலும் கடைப்பிடித்துவரும் தொழிலாளர் - மாந்த உரிமைகளுக் கெதிரான போக்குகளையும் அடக்குமுறை அத்து மீறல்களையும் நாம்புரிந்து கொண்டுள்ளதால், நம்நாட்டு ஏழை எளியவர்களுக்கு உதவ, தமிழக விடுதலைக்குப்பிறகே - நல்லறிஞர்கூடிப் பொருளியல் சுரண்டலை நீக்கி, நாட்டுப் பொது வருவாய் மக்களுக்குத் தக்கபடி பகிர்ந் தளிக்க வழிவகை செய்யமுடியும். இன்றுள்ள தமிழகச் சூழலில இது நடக்க முடியாது.

எளிய மக்களுக்குத் தென்மொழிக் கொள்கை பரவ விடாமல் பார்த்துக் கொள்பவை அரசியல், திரைக் கவர்ச்சிகளே! தென் மொழியால் அறிவுகொளுத்தப் பெற்றவரைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிகள் இவை. தந்நல, குடும்பப்பற்றுள்ள எளியதமிழர்க்கு எப்படியாகிலும் - தம்சுற்றத்தையாகிலும் – நல்வாழ்க்கை வாழ்

விக்கச் செய்ய வேண்டும் என்ற குறுகிய வட்டம் உடனே ஏற்பட்டு விடுவதைத் தடுக்கமுடியாது. இப்படி வாழ்வியற் போலிகளில் சிக்கித் தவிப்போர் தென்மொழிக் கொள்கையை மனத்துள் வைத்திருப்பினும், செயற்படுத்த இன்றுள்ள சூழ்நிலையில் உடனே வெளி வரார்; அப்படிப்பட்ட அறிவாளிகளையே தென்மொழி இதுவரை படைத்துவந்துள்ளது என்றெண்ணி வருந்துவதால் எதுவும் நிலைப்பாடாகச் செய்யமுடியாது. அரசே அஞ்சும் திட்டங்களையும், வருங்காலத்தை எண்ணி அளந்து செயற்பட வேண்டிய வழிமுறைகளையும் தொகுத்து அறிவியுங்கள். தன்னால் எல்லாரும் வந்திணைவர். தென்மொழிக் கொள்கையைச் செயற்படுத்த எளியவர்க்கும் நம்கருத்துச் செல்லவேண்டும் என்பதில் ஐயமில்லை; பட்டி தொட்டிகளில் நம் கருத்து முழக்கத்தைப் பரப்பும் கருவிகளாகிய இயங்கிகள், ஒலிபெருக்கி, துண்டறிக்கை, துண்டுப்படங்களை கைபடக்கப் படங்காட்டிகளைக் கொண்டு பிடித்துப் பரப்பும் வகைக்கான அமைப்புகள் யாவும் தேவை. பெரியாரின் வண்டியைப் போல் ஒரு வண்டி தேவை. நம்மவர் எழுத்துகளிலும் பாடல்களிலும் கொச்சை, வழுமட்டும் கலவாமல் தனித்தமிழில் நம் கருத்துகளை ஏழைஎளியவர்க்குப் பரப்ப நானூறுபேர் கொண்ட ஓர் அமைப்பை தமிழ்நாடு, புதுவை, தமிழீழம் எங்கணும் அமர்த்துதல் நல்லது. உ.த.மு.க.வை இதற்குப் பயன்படுத்தலாம். புலிவேட்டைக்கு ஒரு படையும், கோழி பிடிப்பதற்கு மற்றொரு படையும் என்று அண்ணா கூறியதைப் போல ஏற்படுத்த வேண்டும். தொண்டர் படை ஊர்க்கு ஊர் செல்ல புதிய புரட்சிப் பாதையில் திட்டம் வகுத்துக், கவர்ச்சிப் போர்வையில் செயல்பட வேண்டும். சிற்றூர்ப்புறப் படக் கொட்டகைகளில் இடைவேளையில் உரத்தொலிப்பான்கள் மூலம் கருத்தெழுப்ப வேண்டும். தாங்களே எல்லாப் பொறுப்புகளிலும் அலைக்கழிக்கப்படாத வண்ணம் பல சொற்பொழிவாளர்களை, சேரிக் கூத்தர்களை ஆங்காங்கே அமர்த்திப் பண்பாட்டுப் புரட்சி செய்வது போல் செய்தருள வேண்டும். கொட்டை எழுத்துகளில் சிறுசிறு சொற்றொடர்களில் தட்டிகளிலும், சுவர்களிலும் எழுதிப் பொது மக்கள் பார்க்குமிடங்களில் வைக்கத் தூண்டுதல் வேண்டும். இதற்கு அரசியற் கட்சிகளான தி.மு.க., அண்ணா தி.மு.க., தி.க., நெடுமாறன் கட்சி, குமரி அனந்தன் கட்சி, ம.பொ.சி. கட்சி முதலானவற்றை இணைத்துக் கொள்ளலாம். தேவைப்படுமிடங்களில் வல, இடப் பொதுவுடைமைக் கட்சியினரைக் கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அனைத்துக் கோவில்களின் மூன்றால் — மத - கடவுள் சிக்கல்களை எழுப்பாமல் - தமிழர் உரிமைபற்றிய செய்திகளை அவ்வம் மத, இனத்தார் ஒப்புக் கொள்ளத்தக்க வண்ணம் அரசவலக்காரத்துடன் வேண்டுகோள் எழுப்பலாம். பள்ளிப் பிள்ளைகளுக்கு மனத்திற் பதியும் வண்ணம் சில வரிப் பாடல்களைப் பாடிக் காட்டு

வதன் மூலம் அவர்களின் உள்ளத்தில் தமிழ் நறு நீர் வார்க்கலாம்.

தமிழை முன்வைத்துத் தமிழர் ஒற்றுமைக்கும் தமிழக விடுதலைக்கும் போராட; பிளவுணர்ச்சியும், திரிபுணர்ச்சியும் எழாத வண்ணம், தமிழரைப் போர்க்களத்திற்குள் இறங்கச் செய்ய எல்லா முயற்சிகளையும் கையாளலாம். நாம் கட்சி,மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதும், தமிழர் ஒற்றுமைக்காகவே பாடு படுபவர்கள் என்பதையும் அடுத்தடுத்துப் பல ஊர்களில் பரவலாக வும் பரபரப்பூட்டும்படியாகவும் (செய்தித்தாள், வானொலி, தொலைக் காட்சிகளில் செய்திகள் வரும் வண்ணம்) புதிய புதிய நிகழ்ச்சிகளை உண்டு பண்ணுவதன்மூலம் மக்களுக்கு நம்மை அறிமுகம் செய்து கொள்ளலாம்.

மக்கள் தொகையில் 1/5 பங்கினர்க்கு உணவு வழங்கும் தமிழக அரசின் திட்டத்தை ஏழை எளிய மக்களுக்கு எட்டும்படி செய்வதில் உ.த.மு.க.வினர் ஊதியமும் கொள்கைப்பூசலும் கருதாமல் துணை நிற்பதனால், பல ஊர்களில் தொண்டர் அணிகள் முன்வந்து இதில் பங்கேற்றுள்ள ஆசிரியர், அலுவலர் முதலா னோர்க்கு உதவி ஒத்துழைக்கும்படி பணித்தால், அரசின் புறப் பகையைச் சமாளிக்கலாம். இதற்கு வேலையில்லாத இளைஞர்களாயி னும், அலுவலுக்குச் சென்று எஞ்சிய நேரத்தில் தொண்டு புரிய எண்ணுபவர்களும் உதவலாம்.

''அன்னை தெரசா'' போல் அரசு, மற்றோர் துணைவரும் எனக் கருதாமல் நாம் இதுபோன்ற பற்பல தொடர்ந்த ஊக்கமான புரட்சித் திட்டங்களை மளமளவென்று பரப்பத் தொடங்கினால், ஏழை எளிய ர்கள் நமக்குள்ள நடுநிலைமை உள்ளத்தையும் தமிழ் உணர்வையும் உணர்ந்து கொள்ளத் தொடங்குவர்.

65% பேர் கல்வியற்றவர்களாக உள்ள தமிழ்நாட்டில் திருக் குறளையே இன்னும் தெரியாத தமிழர் இருக்கும்போது, தென்மொழி யில் வந்த அறிவுச்செய்திகளும், கருத்துப் பாட்டுகளும், தமிழறி ஞர்களின் கருத்து முழக்கங்களும் எப்படி அவர்களுக்கு, எட்டும்? எட்டினாலும் எவ்வண்ணம் அவர்கள் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும்? 'அத்துணைப்பெருக்கும் அறிவு கூட்டுவதற்கு ஆண்டவனா லும் முடியாது' என்னும் பழமொழிக்கேற்ப நம் உழவும், அதன் பயனாக விளைச்சலும் வயலோரப் புற்களுக்கும் கற்களுக்கும் முழுக்க முழுக்கப் பயன்படப் போவது நடக்கமுடியாத ஒன்று.

எம். சி. இரா. திரைப்படங்களைப் பார்த்துவிட்டு அந்தக் கவர்ச்சியால் தி.மு.க.வுக்குள் வந்தோர் பலர் என்பதையும், அவர்கள் கழக வளையத்துக்குள் வந்த பின்னர் அவர்களுக்குக் கழகம் பயிற்சி யளித்துவைத்திருந்தால் இன்று ஈரணிகளாக ஆகியிருக்காது. என்பதும் நமக்குத் தெரியும். தென்மொழிப் பள்ளியில்—பட்டறை யில் பயின்ற அறிவாளிகளைத் தொண்டர் படையாக ஆக்குவதே,

Scanned with CamScanner

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மிகக் குறைவான ஊதியம் பெறுபவர்கள் இவர்களே. இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் ஏறத்தாழ 60 விழுக்காட்டு வருமானம் இவர்கள் வழியாகவே பெறப்படுகின்றது எனினும், அங்குள்ள மக்களிலேயே மிகமிகப் புறக்கணிக்கப்பட்ட மக்களாகவும், ஒதுக்கப்பட்ட மக்களாகவும், மிகவும் பிற்படுத்தப் பட்ட நிலையில் உள்ளவர்கள், இம்மலை நாட்டு இந்தியத் தமிழர்களே. இவர்களின் வெயில் மழை பாராத கடுமையான உழைப்பால்தான், அங்குப் புதிய புதிய தோட்டங்கள் பல உருவாகின; குடியிருப்புகள் எழுந்தன. இந்தியத் தமிழர்களாகிய இவர்களை ஆங்கில அரசு தேயிலை, தொயவ (இரப்பர்) மரக் காடுகளில் வேலை செய்ய அழைத்துச் சென்ற பொழுது, வழியிலேயே பலவகைத் தொற்று நோய்களால் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மாண்டனர். இலங்கைத் தோட்டங்களில் பணிசெய்வதற்கென்று இவர்களை அழைத்துச் செல்கையில், இலங்கையில் வாழும் ஏனைய மக்களுடன் சரிசமமான எல்லா வகை வாழ்வுரிமைகளும் வழங்கப்படும் என்ற உறுதி மொழி கூறியே வஞ்சகமாக இவர்கள் இறக்குமதி செய்யப் பட்டனர். ஆனால், இன்று இவர்களின் நிலை பெரிதும் இரங்கத் தக்கதாயும் அவலம் மிக்கதாயும் உள்ளது. இவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள் இல்லை. பெரும்பாலானவர்களுக்குப் படிப்பறிவே இல்லை. இவர்களையெல்லாம் சேர்த்துப் பிடித்துதான் 'இலங்கைத் தொழிலாளர் பேராயம்' (காங்கிரசு) என்று ஒரு கட்சியேற்படுத்தி, இங்கிருந்து குடியேறிய இந்தியத் தமிழரான திரு. **தொண்டைமான்** என்பவர் அக்கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, அம் மலைத் தோட்டத் தமிழர்களுக்காகப் பாடுபட்டு வருவதாகக் கூறி வருகிறார். இவர் ஆளுங்கட்சியாக உள்ள சிங்களவர்களுக்குச் சார்பாக உள்ளதால், இன்று ஏராளமான மலைத் தோட்டங்களுக்கு உரிமையாளராகவும் நல்ல செல்வ நிலையிலும் வாழ்ந்து வருகிறார்.

மற்று, யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டின் பழங்குடி மக்கள். இக்கால் சிங்களவர்களால் தமிழர்கள் என்று குறிக்கப் படுபவர்கள். இந்த இருவகைத் தமிழர்களும் சேர்ந்தோரே! —>

(40-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடனே செய்யத்தக்கது. தென்மொழியை இலக்கியம், கலை, வரலாறு அறிவியல் பாராட்டும் பதின்மர் அடங்கிய குழு ஒன்றனிடம் ஒப்படைத்து விடலாம். தமிழ்ச்சிட்டும் அவ்வாறே நம பொழில் போன்ற இளைஞர் குழுவிடம் ஒப்படைக்கலாம். அவ்விரண்டு தங்களின் பணிகள் இவ்வண்ணம் தொடருமபடிச் செய்துவிட்டு, 'தமிழ்நில'த்தைக் கருத்துச் செறிவும், புரட்சிக் கொள்கையும், எளிய நடையும் கொண்ட இதழாக்கி அதை எல்லார்க்கும் பரப்பும் வகையில், தொண்டர் படையின் பணிகளை வரையறைப்படுத்துங்கள். 1985-இல் நான் என் குடும்பத்துடன் நிலையாக திருச்சிக்கருகிலுள்ள முசிறிபோலும் யாதானும் ஓர் ஊரில் வந்து தங்கிட முடிவுசெய்துள்ளேன். தங்கள் பணிகளுக்கு இறுதிவரை — என் குடும்பத்தைத் துணையாக்குவேன். எஞ்சிய வாழ்நாள் குறைவே. அதற்குள் எந் தமிழ் மண்ணுக்கு உரமாவதே இதுநாள்வரை ஒதுங்கியிருந்த எனக்குக் கிடைக்கும் பரிசாகும்! — **அரிமா வளங்கோ**, பிரான்சு

Scanned with CamScanner

தமிழர்களைத் தவிர, இப்பொழுது பிரிட்சுக்காரர்களால் வந்து வாய்த்த அரசைக் கைப்பற்றியுள்ள சிங்களர்களும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள். கீழ்நாட்டுச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் எனப்படுபவர்கள் அவர்கள். கீழ்நாட்டுச் சிங்களவர்கள் என்பவர்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்துரை, அம்பாந் தோட்டை முதலிய மேற்கு, தெற்கு நகர்ப்புற மாகாணங்களில் வாழ்பவர்கள். கண்டிச் சிங்களவர்கள் எனப்படுபவர்கள் இந்தியத் தமிழர்களைப் போலவே கண்டி, மாத்தளை, நுவரெலியா, வதுளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் முதலிய மலைப்பகுதி மாகாணங்களில் வாழ்பவர்கள். இவர்களும் தோட்டத் தொழிலாளர்களே. கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் பெரும்பாலும் தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழர்கள் இவர்களாலேயே பெருத்த அழிவுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளானார்கள்.

இவ்விரு பேரினங்கள் தவிர, மூர்கள், மலாய்க்காரர்கள், பறங்கியர்கள் ஆகியோரும் மிகச் சிறுபான்மையினராக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வினப் பாகுபாடுகளெல்லாம் ஆங்கில அரசாட்சிக் காலத்திலேயே வகுக்கப்பட்டனவாகும்.

இனி, சமயங்களைப் பொறுத்த அளவில், இலங்கையில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் (67.3 விழுக்காட்டினர்) புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் சிங்களவர்களே. இந்துக்கள் 17.6 விழுக்காட்டினர். திருக்கேதீசுவரம், முனீசுவரம், தொண்டீசுவரம், திருக்கோணசுவரம், நகுலேசுவரம் ஆகிய ஐந்து புகழ்மிக்க சிவத்திருவிடங்கள் இங்கு உண்டு.

இசுலாம் மதம் இங்கு இந்து மதத்திற்கு அடுத்த மதமாக உள்ளது. இங்குள்ள மக்களில் 7.1 விழுக்காட்டினர் இசுலாம் மதத்தைச் சார்ந்தவர்கள். இம்மதத்தைச் சார்ந்த முசுலிம்கள் அனைவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களே. இவர்கள் இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள். கிழக்கு மாகாணம், கொழும்பு, புத்தளம், மன்னார் ஆகிய இடங்களில் பெரும் எண்ணிக்கையாக நெருங்கியும் வாழ்கின்றனர்.

கிறித்துவ மதத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள கிறித்தவர்களில் 7.1 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர். 0.8 விழுக்காட்டினர் பிற கிறித்துவ மதத்தைச் சார்ந்தவராவர். இவர்களல்லாத பிற மதத்தினர் மிகமிகச் சிறுபான்மையான 0.1 விழுக்காட்டினரே.

பொதுவாக இலங்கைத் தமிழர்கள் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அவ்விட மக்கள் தொகையில் பாதிக்கு மேலும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 94.9 விழுக்காட்டளவிலும், திருகோணமலையில் 35 விழுக்காட்டளவிலும், அம்பாறையில் 22 விழுக்காட்டளவிலும் வாழ்கின்றனர்.

(என் இலங்கைச் செலவு என்னும் ஆசிரியர் பாவலரேறு அவர்களால் எழுதப்பெற்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பெற்றது)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்)